# நல்வாழ்வு தரும் பொன்மொழிகள்

தொகுப்பாசிரியர் :
ஆறுமுகம் கந்தையா J.P. அவர்கள்

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு, கொழும்பு 11.
தொலைபேசி : 334004, 331960

விலை ரூபா. 75/=

RangaRakes
Tamilnavarasam.com

# இந்து சமயப் பேரவை

## கௌரவ செயலாளர்

## திரு. சி. சக்திகிரீவன்

## வாழ்த்துரை

**செ**ய்யுள் வடிவில் காணப்பட்ட தர்ம நூல்களை அனைத்து மக்களும் விளங்கிக் கொள்ள வேண்டும் எனும் நோக்கில் அவை வசனநடைக்கு மாற்றப்பட்டன. இன்றைய அவசரமான உலகில் அளவுக்கதிகமான வசனங்களைக் குறுக்கி சித்திரங்கள் மூலமும், வர்ணப்படங்கள் மூலமும், அத் தர்மக்கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. இன்று இக்கலை உலகில் மாபெரும் தனித்துறையாக மிளிர்கிறது. இத்துறையில் கைதடி அஷ்டலக்ஷ்மி நிறுவனம் நம் நாட்டில் முன்னணியில் திகழ்கிறது.

தினத்தாள் கலண்டர், சிறுவர் பாடநூல்கள், தர்ம சிந்தை நிறைந்த இலக்கியங்கள், சைவத் திருமுறை வெளியீடுகள் ஆகியவற்றை ஏற்ற வர்ணப்படங்களோடு வெளியிட்டு மக்கள் உள்ளங்களை அஷ்டலக்ஷ்மியினர் கவர்ந்துள்ளனர். நாவலர் காலத்தில் வசன நடை பயின்ற தமிழ்பாவை இன்று வண்ண நடைபயில்கிறார். இதை எண்ணி மனமார மகிழ்கிறோம்.

இந் நிறுவனத்தின் இயக்குனர் எமது பேரன்பிற்குரிய குலபதி ஆறுமுகம் கந்தையா J.P அவர்கள் இத்துறைப் பணிக்கு ஏற்ற ஒருவர். இவர் எடுத்த காரியத்தை செவ்வனே நிறைவேற்றும் சமய சமூக தர்மப் பணிகளின் முன்னோடி. எமது கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் நிறுவுனராக அமைந்து, செயலாளராக இருந்த பொழுது இவர் ஆற்றிய பணிகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கன.

பல்துறைச் சிறப்புக்கள் நிரம்பப் பெற்ற குலபதி அவர்களும் அஷ்டலக்ஷ்மி நிறுவனமும் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு நிறைவாழ்வு பெற எல்லாம் வல்ல சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் பாதங்களைப் பணிந்து வாழ்த்தி அமைகிறோம்.

375, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
4-6-96

சி. சக்திகிரீவன்



# மனித குலத்துக்கு நல்லறம் காட்டும் பொன் மொழிகள்

- இவ்வாழ்வு உங்களுக்கு ஏன் கொடுக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் அறிவீர்களா? வாழ்நாள் முழுவதும் உணவு தேடி வாழ்வை நடத்துவதற்கு அன்று கடவுளைத் தொழுவதற்காக உங்களுக்கு உதவி செய்யவே வாழ்க்கை அமைந்துள்ளது.
- மனிதன் தனது புத்திசாலித்தனத்தையும், எண்ணத்தையும் இன்று தவறாகப் பயன்படுத்துகிறான். அதனால் விளையும் கெட்டவிளைவுகள் அவனுடைய மன அமைதியைக் கெடுக்கின்றன.
- வாழ்க்கையில் துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை, ஏமாற்றம் இல்லாமல் வெற்றி இல்லை, இரண்டையும் சமமாகப் பாவிக்கும் மனப்பான்மை நமக்கு வேண்டும்.
- நம்முடைய வாழ்க்கையில் ஆண்டவன் சோதனைகளைக் கொடுப்பது. நம்முடைய மனத்தைப் பக்குவப்படுத்தி நல்லபண்புகளை உண்டாக்கு வதற்காகத்தான்.
- ஒரு மனிதனை அவனுடைய சூழ்நிலை உருவாக்குவது இல்லை; அவனுடைய மனம் தான் உருவாக்குகிறது.
- துயரமும், இன்பமும் வாழ்க்கையில் பின்னிக்கிடப்பவை. இரவும், பகலும் போல மாறி மாறிவருபவை. இவை இரண்டும் நாம் செய்யும் வினைகளின் பலன்களால் அமைபவையே.
- குறுக்குவழிகளில் பணம் சம்பாதிக்கலாம். பெயர் புகழ் எல்லாவற்றை யும் அடையலாம் ஆனால் அவை எதுவும் நிலைக்காது கடைசியில் அவமானத்தில் அவப்பெயரிலும் தான் கொண்டு போய்விடும்.
- வாழ்க்கையில் நாம் ஆசைப் பட்டுத்தேடும் பணம், அதிகாரம், பெருமை எல்லாமே நாம் இறந்து போனபின் நம்முடன் வரக் கூடியவை அல்ல.
- அகங்காரத்தை விடுத்து மனிதன் தெய்வ நம்பிக்கையுடன் வாழ முற்பட்டால் தான் நல்வாழ்வு வாழ இயலும்.
- பாவமும் புண்ணியமும் நாம் செய்யும் செயல்களிலேயே உள்ளன. செய்யும் செயல்கள் ஒவ்வொன்றையும் தெய்வார்ப் பணமாகச் செய்துவந்தால் அவை புனிதத்தன்மைபெற்றுவிடும்.

RangaRakes
Tamilnavarasam.com

❒ இவ்வுலகில் வாழும் வகையில் உலகில் அறிவினைப் பெற்று அதன்படி நடக்க வேண்டும். மனிதருக்குச் செயல்கள் மிக முக்கிய மானவை வேலைசெய்வதன் மூலமும் செயல்கள் மூலமும் தான் நீ எண்ணம் சொல் செயல் இவற்றை இசைவு படுத்தக் கற்றுக் கொள்கிறாய்.

❒ மாணவனாக இருக்கும் போது உனது பாடங்களை நன்றாகப்படிக்க வேண்டும். இல்லறம் நடத்தும் போது குடும்பப் பொறுப்புக்களையும், வேலைப் பொறுப்புக்களையும் ஏற்று வேலை செய்ய வேண்டும். வேலையிலிருந்து ஓய்வு பெறும் போது அந்தநிலைக்குத் தகுந்தவாறு கடமைகளை செய்ய வேண்டும்.

❒ செயல்களை ஒழுங்காகச் செய்யும்போது உடலும் ஒழுங்காக இருக்கிறது, உடலும் செயலும் ஒழுங்காக இருக்கும் போது மனமும் புனிதமடைகிறது. அந்தச்செயலின் மூலமாகத் தான் நாம் தூய்மையான மனதைப் பெறுகிறோம்.

❒ கூடி வாழ்ந்தால் கோடி நன்மை பிரிந்து வாழ்ந்தால் துன்பம் தான் பெருகும்.

- சாயிபாபா

## அறிவு

❒ உடம்பு வளைந்து நிமிர்வதால் சுறுசுறுப்பு உற்றவருக்கு அறிவில் தெளிவு ஏற்படும்.

- வாரியார்

❒ அறிவுத் தனிமையில் நமது நண்பன்; இன்பத்தின் வழிகாட்டி; துன்பத்திலோ ஆதரவாளர்; நண்பர்களுக்கிடையில் ஆபரணம்; பகைவர்களிடமிருந்து காக்கும் கேடயம்; கற்றறிந்தோர் முன்னிலையில் குரு.

- வினோபா பாவே



❒ எல்லா உடைமைகளிலும் அறிவே அறியாத வெல்வம்.

- சாக்ரடீஸ்

❒ எந்த இல்லத்தில் நூலகம் இருக்கிறதோ, அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது.

- பிளேட்டோ

❒ அதிகம் கற்றவனாயிரு; ஆனால், பிடிவாதக்காரனாக இருக்காதே.

- யாரோ

❒ மனிதனை உயர்த்துவது பணமன்று, பதவியன்று, குலமன்று, பருமனன்று, உயரமன்று அறிவு ஒன்று தான் மனிதனைஉயர்த்தும்.

- வாரியார்

❒ சிந்தனையின் முதிர்ச்சிதான் ஞானம்.

- டெமாஸ்தனிஸ்

❒ கல்வியின் வேர்கள் கசப்பானவை; ஆனால், அதன் கனிகள் இனிப்பானவை.

- யாரோ

❒ அறியாமையைவிட, இழிவான அடிமைத்தனம் வேறு கிடையாது.

- இங்கர்சால்

❒ கல்வியறிவு இன்ப வாழ்க்கையின் போது ஓர் அணிகலனாக விளங்கி மகிழ்வூட்டுகிறது; துன்ப வாழ்வின் போது, நமக்கு அடைக்கலம் தந்து ஆதரவு காட்டுகிறது.

- அரிஸ்டாட்டில்

❒ அறியாமையுடன் நூற்றாண்டுகள் ஒருவன் வாழ்வதைவிட, அறிவுடன் ஒரு நாள் வாழ்வதே மேலானது.

- புத்தர்

❒ அறிவாளிகளின் கூட்டம் உயிருள்ள நூல் நிலையம்.

- ராபின்சன்

❒ அறிவு மனிதனின் நண்பன்; அறிவின்மை அவனது பகைவன்.

- டெம்பிள்

RangaRakes
Tamilnavarasam.com

- தன் துன்பத்தை வெளிக்காட்டாமல் இருப்பவனைவிட, தன் மகிழ்ச்சியை வெளிப்படையாகக் காட்டாமல் இருப்பவனே அறிவாளி,

  - விட்டர்

- இறைவன் அறிவுள்ளவனைக் காக்கின்றார்.

  - சாயிபாபா

- அனுபவத்தை விவேகத்துடன் பயன்படுத்திக் கொண்டால், எதிர் காலத்தில் பல வெற்றிகளைச் சாதிக்கலாம்.

  - ரொதென்

- நீங்கள் செல்வத்தைக் காக்கிறீர்கள்; அறிவோ உங்களைக் காக்கிறது. செல்வத்தைப் போலன்றிக் காலத்தால் கறைபடாதது அறிவு.

  - ஹஜ்ரத் அலி

- ஒழுக்கமளிப்பது; மனவலிமை தருவது; புத்தியை விரிவாக்கம் செய்வது; ஒருவனைத் தன் வலிமை கொண்டு நிற்கச் செய்வது ஆகிய தன்மைகளுள்ள கல்வியே நமக்குத் தேவை

  - விவேகானந்தர்

- அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடையரேனும் இலர்.

  - திருவள்ளுவர்

- தன் காலில் நிற்க எது உதவுமோ அதுவே கல்வி.

  - விவேகானந்தர்

- மனம் விட்டுப் பேசுவதைவிடச் சிறந்த அறிவு வேறில்லை.

  - டிஸ்ரேலி

- குருநாதர் மாணவனின் அறிவு விளக்கே ஏற்றிவைக்கும் ஞானதீபம்

  - சாயிபாபா

- தன்னை அறிவது அறிவு; தன்னை மறப்பது மடமை.

  - ஜெர்மன் பழமொழி

- சத்தியம், நிதானம், சகிப்புத் தன்மை ஆகிய மூன்றும் தான் அறிவை வளர்க்கின்றன.



  - வேல்ஸ்

- சான்றோர் ஆவதற்கு அறிவில் தெளிவு, உயர்ந்த புத்தி, சீரிய சிந்தனை, புதிய கருத்தைக் கேட்கும் பரந்த மனப்பான்மை நினைவாற்றல் ஆகியவை தேவை.

  - யாரோ

- அன்பு வழியில் ஆண்டவனின் பக்தியில் ஈடுபடுங்கள் உங்கள் குழப்பம் யாவும் மறைந்துவிடும்.

  - சாயிபாபா

## அன்பு

- அன்புதான் அழகு என்பதைக் குழந்தைப் பருவ முதலே நான் அறிவேன்.

  - தாகூர்

- அன்புதான் இன்ப ஊற்று; அன்புதான் இன்ப ஜோதி; அன்புதான் உலக மகா சக்தி.

  - புத்தர்

- முழுமையான அன்பு இல்லாத இடத்தில் அழகு இருக்காது. அழகு இல்லாத இடத்தில் ஒளியும் இருக்காது.

  - அரவிந்தர்

- அன்பே கடவுள், அன்பில் தோய்ந்து வாழ வேண்டும். இந்த உள்ளார்ந்த நம்பிக்கையுடன் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

  - சாயிபாபா

- அன்பு துன்பத்தை இன்பமாக்குகிறது. பாரத்தை இலேசாக்குகிறது. கசப்பை இனிப்பாக்குகிறது.

  - டாக்டர் ச. மு. பிள்ளை

- அன்பைப் பெருக்கினால் இன்பம், ஆனந்தம் தழைத்தோங்கும். இன்பத்தை ஒழுக்கத்தின் மீது தான் அமைக்க வேண்டும். அடிப்படையில் சத்தியம் பிறழாமல் இருக்க வேண்டும். எல்லா வற்றிற்கும் ஆதாரம் அன்பே.

  - கோலரிட்ஜ்

RangaRakes

Tamilnavarasam.com

❒ அன்பு, சத்தியம், அழகு ஆகியவை எல்லாம் கேட்கக் கூடிய விஷயங்கள் மட்டுமல்ல. இவையாவும் வாழ்க்கையோடு ஒன்றுபட வேண்டும்.

- ஹீபர்ட்

❒ உலகிலேயே இனிமையானது அன்பு. ஆனால், அதற்கடுத்தாற்போல் இனிமையானது வேற்றுமையுணர்வு.

- லாங் பெல்லோ

❒ அன்பான சொல்லானது மருந்தாக இருப்பதோடு வாழ்த்தவும் செய்கிறது.

- அயர்லாந்துப் பழமொழி

❒ அன்பு உள்ளங்கள் இறைவனின் சாயல்கள்; அவை, உலகப் படைப்பின் நோக்கத்தைப் பிரதிபலிக்கின்றன.

- யாரோ

❒ ஆண்டவனை அடைவதில் மிக விரைவான பாதை அன்புப் பாதையாகும்.

- சாயிபாபா

❒ பகைவரிடம் அன்பு காட்டி அவரிடமிருந்து நலம் பெறுதல் நல்லோர் இயல்பு.

- நீதி வெண்பா

❒ அன்போடு செய்யும் தானம் இறைவன் சந்நிதிக்கு வழி காட்டும்.

- யாரோ

❒ அன்பகத்தில்லா உயிர்வாழக்கை வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த் தற்று.

- திருவள்ளுவர்

❒ இப்படைப்பின் ரகசியங்கள் அனைத்துக்கும் நுழைவு வழி அன்புதான்

- விவேகானந்தர்

❒ கடமை இனிமையாவது அன்பின் மூலம் தான்.

- விவேகானந்தர்

❒ கோபத்தை அன்பாலும், பாசத்தாலும் விவேகத்தாலும், பொய்யை மெய்யாலும் வெல்ல வேண்டும்.

- சாயிபாபா



❒ அன்பான குணம், அலையில்லாத நதி.

- யாரோ

❒ கடவுளிடம் பக்தி செலுத்த வயதும், உருவமும், குறுக்கிடாது. கல்வி, செல்வம், ஜாதி, பலம் முக்கியமல்ல நல்ல ஆசாரம், நற்குணம் இவற்றிலும் பகவான் அவ்வளவாக கவனம் செலுத்துவதில்லை அவர் அன்பு ஒன்றையே எதிர்பார்க்கிறார்.

- வாரியார்

## அன்னை

❒ கௌரவத்துக்கு உரிய யாவருக்குள்ளும் தாயே அதிகக் கௌரவத்துக்குரியவர்.

- வாரியார்

❒ பெண்ணின் மனமும் குணமும் பெற்ற தாய்க்குத்தான் தெரியும்.

- மு. வ

❒ என் உயிர் போகட்டும்; என் பிள்ளைகளைக் காப்பாற்று என்று அன்னைதான் சொல்வாள்.

- யாரோ

❒ தாயை எவருடனும் ஒப்பிடுதல் கூடாது; ஏனெனில் அவள் ஒப்புவமையற்றவள்.

- பெல்ஜியம்

❒ தாயின் வாழ்த்து வெந்தணலால் வேகாது; வெள்ளத்தால் அழியாது.

- ரஷ்யா

❒ அன்னையின் அன்பிற்கு வயதே கிடையாது.

- ஸ்பெயின்

❒ குழந்தை அழாவிட்டால் தாய்க்கு ஒன்றும் புரியாது.

- ரஷ்யா

❒ அரசாளும் மன்னனும் அன்னைக்கு மகனே.

- இந்தியா

RangaRakes Tamilnavarasam.com

❒ தாயின் இதயம், என்றுமே வாடாத மலர்.
- இங்கிலாந்து

❒ அன்பின் உறைவிடம், அன்னை.
- ஆபிரிக்கா

❒ தாயின் இதயம், குழந்தையின் பள்ளிக்கூடம்.
- ஆபிரிக்கா

❒ குழந்தைகளை உண்மையாக உருவாக்கும் சிற்பி தாய்தான். எனவே, தாய்மார்கள் தங்கள் உரிமைகளை மிகக் கவனமாகப் பயன்படுத்தினால், அழகான, பிறரால் மதிக்கப்படும் குழந்தைகள் உருவாகும்.
- கிரேக்கம்

❒ ஆண்டவன் எல்லா இடத்திலும் இருக்க முடிவதில்லை; அதனால்தான் அன்னையைப் படைத்தான்.
- இஸ்ரேல்

❒ தாயில் கெட்டவளுமில்லை; சாவில் நல்லதும் இல்லை.
- இஸ்ரேல்

❒ தாய்க்குப்பின் எதுவுமே இந்த உலகத்தின் அன்புக்குச் சமமாகாது.
- ஸ்பெயின்

## அழகு

❒ அழகுள்ள பெண் கண்களுக்கு விருந்து; குணமுள்ள பெண் மனத்திற்கு விருந்து; முன்னது ஆபரணம் பின்னது பொக்கிஷம்.
- யாரோ

❒ அழகை அதிகமாக்கிக் கொள்ளப் பெண்ணொருத்தி என்ன உபாதையையும் பொறுத்துக் கொள்வாள்.
- மான்டெயின்

❒ பெண்களிடம் சற்று எட்டியிருந்து ஒதுங்கிப் பழகுவதே ஆண்களுக்கு அழகு.
- தாகூர்



❒ லைலாவின் அழகைக் காண, மஜ்னுவின் கண்கள் வேண்டும்.
- பாரசீகம்

❒ படித்தவனுக்கு அழகு, ரசிப்புத் தன்மை கலைஞனுக்கு அழகு, கற்பனை; மனப்பக்குவம் அடைந்தவனுக்கு அழகு, உணர்ச்சியும் நிதானமும்.
- பாபுராவ் படேல்

❒ அழகில்லா அணங்கும், புகழில்லா ஆடவனும் ஒன்று.
- அண்ணா

❒ செயலைத் தவிர வேறு அழகில்லை.
- ஆபிரிக்கப் பழமொழி

❒ அழகற்றதற்கு அழகூட்டுவது அன்பு.
- யாரோ

❒ அழகான உடலைத் தேடாதே; அறிவுள்ள மனத்தைத் தேடு.
- யாரோ

## ஆசை

❒ வித்துக்களெல்லாம் காலம் தவறிவிதைத்தால் முளைக்காது. முளைத்தாலும் பயன் தராது. ஆசையெனும் வித்தாலும் எந்தக் காலத்தில் எந்தச் சமயத்தில் போட்டாலும் முளைத்து விடும்.
- வாரியார்

❒ ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணம்.
- புத்தர்

❒ ஆசையை விட்டொழியுங்கள்; நமக்குப் பேரானந்தம் கிடைக்கும் என்பது திண்ணம்.
- திருமூலர்

❒ மனிதனுக்கு ஆசையால் விருப்பமும், விருப்பத்தால் கோபமும், கோபத்தால் மயக்கமும், மயக்கத்தால் புத்திநாசமும், புத்தி நாசத்தால் அழிவும் ஏற்படுகிறது.
பகவத் கீதை

RangaRakes Tamilnavarasam.com

❒ அழியும் இந்த உலகியலில் நாம் ஆசையினால் எத்தனை பெரிய மாளிகைகளைக் கட்டுகிறோம்.....?

- யாரோ

❒ நீண்ட நாள் வாழவேண்டும் என்பது எல்லாருடைய ஆசையும்; ஆனால், நன்றாக வாழ நினைப்பவர்கள் மிகக் குறைவு.

- யாரோ

❒ புகழ் ஆசையைத் துறப்பதை விட, பண ஆசையைத் துறப்பது மிக எளிது.

- லின்யூடாஸ்

❒ ஆசை இருப்பவனிடம் அன்பும், ஆனந்தமும் நெடுநாள் தங்குவதில்லை.

- யாரோ

❒ ஆசை போயிற்று; கவலையும் தொலைந்தது; இனி வேண்டியது ஒன்றுமில்லை. யாருக்கு ஒன்றும் தேவையில்லையோ அவனே அரசருக்கு அரசன்.

- கபீர்தாசர்

❒ நாம் விரும்புவது நமக்குக் கிடைப்பதில்லை; எனவே கிடைப்பதையே நாம் விரும்புவோம்.

- காந்தியடிகள்

❒ ஆசை பேராசையாகவும், அன்பு வெறியாகவும் மாறக்கூடாது. ஆசை அண்டினால் அழுகையும் அண்டும்.

- யாரோ

❒ பிறரைக்கெடுத்து தான் மட்டும் வாழ நினைத்தல் ஆசை. தான் மட்டும் வாழ நினைத்தல் பற்று. தானும் தன்இனமும் தன்நாடும் வாழ நினைத்தல் அன்பு. சராசரம் வாழ நினைத்தல் அருள்எனப்படும்

- வாரியார்



## இதயம்

❒ மனம் என்ற கோயிலின் ஒளிவிளக்கு பகுத்தறிவு; கோபம் என்ற புயல் வீசினால், அந்த அரிய விளக்கு அணைந்துவிடும்; ஆகவே, கோபத்திற்கு இடம் கொடாதீர். பகுத்தறிவை அணைத்து விடாதீர்.

- இங்கர்சால்

❒ மனத்தை அடக்கி உள்ளத்தை ஒருமுகப்படுத்தல், வேதம் ஓதுவதற்கும் வேள்வி செய்வதற்கும் ஒப்பாகும்.

- வேதாந்த தீபம்

❒ இதயத்தோடு போராடுவதே உயர்ந்த போராட்டம்.

அரேபியப் பழமொழி

❒ மனிதனின் மன உறுதி மலைகளையும் தகர்த்தெறியும்.

- அரேபியப் பழமொழி

❒ விரும்புவது கிட்டவில்லையானால், இதயத்தை விரும்ப வேண்டும்.

- அல்பேனியப் பழமொழி

❒ மனம் உறுதியாக இருந்தால் பாம்பின் நச்சு கூட சக்தியற்றதாகிவிடும்.

- விவேகானந்தர்

❒ பாராட்டுக்கு நாவின் ஈரம் மட்டும் போதாது; இதயத்தின் ஈரமும் வேண்டும்.

- காண்டேகர்

❒ மனச்சாட்சி என்பது பண்பாட்டுணர்ச்சியின் வளர்ச்சியடைந்த பாகம்.

- சாக்ரடீஸ்

❒ இதயம் - நமக்குள்ளே ஒரு நீதிமன்றம்.

- தி. ஜானகிராமன்

❒ பெண்கள் இதயத்தால் ஆளுகிறார்கள்; ஆண்கள் மூளையால் அடிமையாகிறார்கள்.

ஹாவ்லக் எவ்லீஸ்

RangaRakes Tamilnavarasam.com

# இன்பம்

❒ நாம் துன்பமின்றி இன்பமாக வாழவேண்டும் என்றால் மற்றவர்க்கு மனம் வாக்கு காயங்களால் துன்பம் செய்யக்கூடாது. நன்மையே செய்தல் வேண்டும். இதுதான் உண்மையான பண்பாடு
- வாரியார்

❒ இன்பம் என்பது எந்த வகையிலும் பிறருக்குச் செய்கின்ற தொண்டு மனப்பான்மையிலிருக்கிறது.
- காண்டேகர்

❒ இன்பத்தின் இறுதி எல்லை மௌனம்.
- தி. ஜானகிராமன்

❒ பரிசுத்தமான உள்ளத்துடன் ஒருவன் பேசினாலும், செயல் புரிந்தாலும் மகிழ்ச்சி நிழலைப் போல அவனைப் பின்தொடரும்.
- புத்தர்

❒ இன்பத்தைப் பங்கு போட்டால் இரட்டிப் பாகும்.
- டென்மார்க்

❒ பேராசை முடியுமிடத்தில் மகிழ்ச்சி தொடங்குகிறது.
- அங்கேரி

❒ பணமும், மகிழ்ச்சியும் நிரந்தர விரோதிகள்; ஒன்று தங்குமிடத்தில் மற்றொன்று தங்குவதில்லை.
- *சீனா*

❒ இன்பமும் துன்பமும் விதியன்று; தானாகத் தேடிக் கொள்வது.
- *சீனா*

❒ தியாகம் செய்யவும், மன்னிக்கவும், நன்றி கூறவும் தெரிந்துகொண்டு விட்டால், நாம் மகிழ்ச்சியைத் தேடி ஓட வேண்டியதில்லை. அதுவே நம்மைத் தேடி ஓடிவரும்.
ஜோசப் நியூட்டன்



# உலகம்

❒ இவ்வுலகம் ஒரு முட்கொடிபோன்றது. முட் கொடியின் முள்ளில் மாட்டிக்கொண்டுள்ள துணியின் ஒரு பகுதியை விடுவிப்பதற்குள் மற்றொரு பகுதி அதில் மாட்டிக்கொள்கிறது. உலகமெனும் முட்செடியில் அகப்பட்டுக் கொள்கிறவர்களின் கதியும் அப்படியே.
- வாரியார்

❒ இந்த உலகம் நீங்கள் எப்போது கீழே விழுவீர்கள் என்று எதிர்நோக்கிக் காத்திருக்கிறது, உங்கள் மீது ஏறி ஓட..
- அமெரிக்கா

❒ மனிதன் உலகில் வாழ வழி செய்து விட்டான். ஆகவே, இந்த உலகத்தை, வாழ்வதற்கேற்ற மிகவும் சௌகரியமான இடமாக அவனே செய்து கொள்ள வேண்டும்.
- ஆண்டன் செகாவ்

❒ அறிவு உலகத்தில் பகை இருக்கிறது; எதிர்ப்பும் இருக்கிறது, வியாபார உலகில் உறவு இருக்கிறது, ஒற்றுமையும் இருக்கிறது.
- குறள்

❒ ஆசிரியரும், தாய் தந்தையும் நமக்குப் பேசக் கற்றுத் தந்திருக் கிறார்கள். உலகமோ வாயை மூடிக் கொண்டிருக்கக் கற்றுத் தருகிறது.
- செக்கோஸ்லோவேகியா

❒ பொறுமை உடையவனுக்கே உலகம் சொந்தம்.
- இத்தாலி

❒ முழுக்க முழுக்க எட்டிக்காயாக இருக்காதீர்கள்; உலகம் உங்களை உமிழ்ந்து விடும்.
- பாரசீகம்

❒ நீங்கள் உங்களைச் சாதாரணமானவராகக் கருத வேண்டாம்; ஏனெனில், இந்த உலகமே உங்கள் தேவைக்காக அல்லவா விரிந்து கிடக்கிறது?
- பெர்சியா

❒ உலகம் நமக்குரிய ஒரே வேலி; அதை நன்றாகத் தெரிந்து கொள்.
- யாரோ

RangaRakes Tamilnavarasam.com

❑ உலக வாழ்வை மேன்மைப்படுத்துவது அன்பு; உலக வாழ்வைச் சுவைக்கச் செய்வதும் அன்பு,

யாரோ

## உண்மை

❑ உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும், அதைப் பின்பற்றிச் செல். கோழையாகவும் வேடதாரியாகவும் இருக்காதே.

- விவேகானந்தர்

❑ உண்மையின் புன்முறுவலே அழகு; ஆனால், உண்மை என்ற பெண், தன் முகத்தை உற்று, நோக்கும் கண்ணாடி சரியானதாக இருக்க வேண்டும்.

- தாகூர்

❑ உண்மையை நாடுகிறவன் மௌனமாயிருந்து பழக வேண்டும்; மிக லேசான சாதனங்களுள் ஒன்று, மௌனம்.

- யாரோ

❑ எப்போதும் உண்மையை மறைக்காது சொல்லுகின்ற மன உறுதி வேண்டும்.

- காந்தியடிகள்

❑ உண்மையான மகிழ்ச்சியின் அடிப்படை மனச்சான்றில் உள்ளது.

- யாரோ

❑ உண்மையை அறிவது ஞானம் உண்மையை நம்புவது பக்தி. உண்மையாக நடப்பது சன்மார்க்கம்.

- யாரோ

❑ மாபெரும் உண்மைகள் இவ்வுலகின் எளிய விஷயங்களே! நீ உயிரோடு இருப்பதைப் போல.

- விவேகானந்தர்

❑ உண்மையிலும், உத்தமமான காரியத்திலும் மேன்மை பெறுவதற்கு எப்பொழுதும் பாடுபடுங்கள்.

- யாரோ



❑ உண்மையே உணர் என்று வேதம் கூறுகிறது. உண்மை உயர்வுதரும்.

- வாரியார்

## உழைப்பு

❑ "உழைத்து உண்" என்ற பழமொழியை உன்னுடன் கடவுள் கொடுத்த கையும், காலும் இருக்கின்றன. கை படைத்த நாம் ஏன் உழைத்து வாழக்கூடாது.

- வாரியார்

❑ கருதிய கருமம் கைகூடும் வரைக்கும் விழித்திருங்கள்; உழைத்திருங்கள்.

❑ உழைப்பின் பயனைவிட உழைப்பு மதுரமாயிருக்கிறது.

❑ வெற்றியை விட போராட்டமே இனிமையாயிருக்கிறது.

- எட்மன்ட்பெர்க்

❑ துருப்பிடித்துத் தேய்வதைவிட, உழைத்துத் தேய்வது மேலானது.

- விவேகானந்தர்

❑ உறுதியைப்போல் உழைப்பிருந்தால் வெற்றி காண்பாய்; வாழ்வு சூன்யச் சுமைதான். இருந்தாலும் உயிரைக் காத்துக்கொள்ள நான் போராடியே தீருவேன்.

- புதுமைப்பித்தன்

❑ உழைப்பவனுக்கு மரியாதை குறையுமிடத்தில், உதைப்பவனுக்கு மதிப்பு வளரும். அது அவர்களுக்கே தீமையாய் முடியும்.

- மு. வ.

❑ மனிதன் உழைப்பின் சத்தியை மட்டும் பயன்படுத்தினால் போதாது. அந்த உழைப்புடன் தன் எண்ணத்தையும் கலக்க வேண்டும்.

- இங்கர்சால்

❑ அயர்ந்து விடாதே! சொர்க்கத்திற்கு இன்னும் சிறிது தூரம் தான் இருக்கிறது.

- ருதர்போர்டு

RangaRakes Tamilnavarasam.com

❐ நம்மால் எப்படி இந்தப் பெரிய காரியத்தைச் செய்ய முடியும் என்று நினைத்து நல்ல செயல்களைச் செய்யாமல் இருந்து விடாதே, நீர், துளித் துளியாகக் கொட்டியே குடம் நிரம்பி விடும்.

- புத்தர்

❐ நாம் செய்யும் செயல் எப்பொழுதும் இன்பத்தையே கொடுக்காமல் இருக்கலாம். ஆனால், அச்செயலைச் செய்யாமல் சும்மா இருப்பதன் மூலம் ஒருநாளும் இன்பம் உண்டாவதில்லை.

- டிஸ்ரேலி

❐ மருத்துவரின் இதயம் கொண்டு பணிபுரிக.

❐ நாம் அனைவரும் கடுமையாக உழைப்போம்; தூங்குவதற்கு இது தருணமல்ல. எதிர்கால உலகம் உருவாவது நம் உழைப்பைச் சார்ந்திருக்கிறது.

❐ மனித குலத்துக்குச் சேவை செய்வதே மிக உயர்ந்த வழிபாடு.

❐ பொறாமையையும், கர்வத்தையும் விட்டுத் தொலை; ஒன்றிணைந்து பிறர்க்கென உழைக்கக் கற்றுக் கொள்.

❐ எழுமின்! விழிமின்!! கருதிய காரியம் கைகூடும் வரை அயராது உழைமின்.

- விவேகானந்தர்

❐ உழைப்பும், நம்பிக்கையும் சேருமிடத்தில் ஏழ்மை இருக்காது.

❐ உழைப்பு எந்த மனிதனையும் ஏமாற்றுவதில்லை.

❐ உழைக்காமல் உண்பவன் திருடன்.

❐ உழைப்பு உடலைப் பலப்படுத்தும்; துன்பங்கள் மனத்தைப் பலப்படுத்தும்.

❐ உழைப்பு, மூன்று பெருந் தீமைகளை நம்மிடமிருந்து நீக்குகின்றது; அவை: தொந்தரவு, தீயொழுக்கம், தரித்திரம்.

❐ ஒருவனுடைய மிகச் சிறந்த நண்பர்கள் அவனுடைய பத்து விரல்கள்.

- யாரோ



## ஒழுக்கம்

❐ ஒருவன் உயர்வு பெறவேண்டுமாயின் அடக்கமாக இருக்கவேண்டும். அடக்கமாக உள்ளவன் வாழ்வு பெறுவான்.

- வாரியார்

❐ பணிவு என்பது தாழ்வின் சின்னமல்ல; உயர்ந்த ஒழுக்கத்தின் அறிகுறி.

- அடிசன்

❐ தீய குணங்களைச் சுலபமாக விட முடிவதில்லை; ஆனால் நற்குணங்களைச் சுலபமாக விட முடிகிறது.

- ஷா

❐ உயர்ந்த பண்பாடு என்னும் சிறைக்குள் அடைபட்டு, அதைப் பயில நேர்மை, ஒழுக்கம் என்னும் சட்டதிட்டங்களை நமக்கு நாமே ஏற்படுத் திக்கொள்ள வேண்டும். அப்போது தான் மனிதர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பொருள் இருக்க முடியும்.

- தாகூர்

❐ பொறுமையைவிடச், சிறந்த தவமில்லை
திருப்தியைவிட உயர்ந்த இன்பமில்லை
ஆசையைவிட பெரிய தீமையில்லை
கருணையைவிடப் பெரிய அறமில்லை
மன்னிப்பதைவிட ஆற்றல் மிக்க ஆயுதமில்லை.

- குருநானக்

❐ வணங்கிறவன் வாழ்வான், நிமிர்ந்தவன் அழிவான்

- வாரியார்

❐ பண்பிலும் பாவனையிலும், நடையிலும் எல்லா விஷயங்களிலும் மிக உயர்ந்து நேர்த்தியாக விளங்குவது எளிமைதான்.

- லாங்பெல்லோ

❐ ஒரு மனிதனின் உண்மையான பண்பை எப்போது கண்டுபிடிக்கலாம்? அவனுக்கு அதிகாரம் இருக்கும்போது.

- பித்தாகரஸ்

❐ உன்னை நீ உயர்த்திக்கொள்ள வேண்டுமெனில் சான்றோருடன் பழகு. அவர்களின் வழி நட. நீதி தவறாமல் ஒழுக்கத்தைப் பின்பற்று. உறுதியாக நீயே உயர்ந்துவிட முடியும்.

- பஞ்ச தந்திரம்

RangaRakes Tamilnavarasam.com

❒ ஒழுக்கம் என்பது ஒரு மரம்; புகழ் என்பது அதன் நிழல்; நிழலைப் பற்றியே நாம் அதிகமாக நினைக்கிறோம். ஏனோ மரத்தை மறந்து விடுகிறோம்.

- யாரோ

❒ பண்புள்ள மனிதன் உலகத்தையே வென்று விடுவான்.

- ஆஸ்கார் ஒயில்டு

❒ பண்பில்லாத இடத்தில் சுதந்திரம் இருக்க முடியாது.

- ரூஸ்வெல்ட்

❒ நல்லொழுக்கம், நற்செயல், நற்சாட்சி இவையே கடவுள்நெறியாகும்

- சாயிபாபா

❒ எல்லா நாகரிகங்களுக்கு அடிப்படை சுயநலத் தியாகமே.

- விவேகானந்தர்

❒ பிச்சைக்கார உருவிலே இருந்தாலும் ஒழுக்கம் கௌரவிக்கப்படும்.

- ஜெர்மன்

❒ ஒழுக்கமாக வாழ்பவன் சிறந்த போதகன்

- யாரோ

❒ மனித குலத்துக்கு நீ வீரன் எடுத்துக் காட்டாகத் திகழவேண்டும். உமது கடமை பூரணத்தன்மை அடைய வேண்டும்.

- சாயிபாபா

**திருமுருக கிருபானந்தவாரியார் கூறியது**

❒ ஒழுக்கம் விழுப்பம் தருவதால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்பெறுகிறது.

❒ மனிதனுக்கும், விலங்குகளுக்கும் இடையில் உள்ள எல்லைக்கல் - விலங்கிலிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுவது ஒழுக்கம் ஒன்றுதான்.

ஒழுக்கமற்றவன் மனித விலங்கு.

❒ அணுகுண்டு போட்ட இடத்தில் நாற்பது ஆண்டுகளுக்குப் புல் முளைக்காது.
பொறாமைக்காரன் இருந்த இடத்தில் நானூறு ஆண்டுகளுக்கு எதுவும் முளைக்காது.

அணுக்குண்டை விட பொறாமையானது மக்களை அழிக்கும்.



❒ ஏணி எல்லோரையும் மேலேற்றும் தான் மேலேறாது.
தோணி எல்லோரையும் ஆற்றைக் கடத்தும். தான் கடவாது.
அதுபோல் நீதி உரைப்பவன் (புராணிகன்) இருக்கக் கூடாது.

❒ கோபத்தோடு வருபவனிடத்தில் குளிர்ந்த முகத்தோடு பேசு; அவன் கோபம் தணிந்துவிடும்.

❒ உனக்குக் கோபம் **வரும்** போது கண்ணாடியில் உன் முகத்தைப் பார்; உனக்கே வெட்கமாக இருக்கும். கோபம் தணிந்து விடும்.

❒ மிகுந்த செல்வமும் கல்வியும் இருந்தாலும் ஒழுக்கம் இல்லாவிட்டால் அவன் செத்தவனுக்குச் சமனாம். ஒழுக்கமே உயிர்.

❒ ஒற்றுமையில் உயர்ந்தது எறும்பு. சாமர்த்தியத்தில் உயர்ந்தது வான்குருவி. நன்றியில் உயர்ந்தது நாய். வலிமையில் உயர்ந்தது யானை. தந்திரத்தில் உயர்ந்தது குள்ளநரி.
ஒழுக்கமிருந்தால்**தான்** மனிதன் உயர்ந்தவன்.

❒ ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் தம் மனைவியைக் கூட தாயாகப் போற்றினார்.
நாம் அடுத்தவர் மனைவியையாவது தாயாக நினைக்க வேண்டாமா?
தாய்மையை வளர்க்க வேண்டும்.

❒ மழை சுத்தமான நீராக இருந்தாலும் கீழே எந்த இடத்தில் சேருகிறதோ அதன் மயமாகும்.
அதுபோல் ஒருவன் யாருடன் சேர்கிறானோ அவன் குணத்தையே பெறுகிறான்.

❒ வியாபாரிகள் இருப்புத் திட்டம் பார்ப்பது போல், நம்மிடத்தில் என்ன என்ன நல்ல குணங்கள் இருக்கின்றன என்றும், எவ்வளவு தூரம் ஆன்மிகத்தில் முன்னேறியிருக்கிறோம் என்றும் சோதித்துப் பார்.

❒ படித்தவர், பணக்காரர், வயது முதிர்ந்தவர் ஆகியோர் பெரியோர் அல்லர்.
பிறர் குற்றம் பேசாதவனே பெரியவன்.

❒ ஒருவனுடைய உயர்வையும் தாழ்வையும் அவனுடைய வாக்கு தெரிவிக்கும்.
சட்டியில் இருப்பதுதானே அகப்பையில் வரும்?
உண்டது ஏப்பத்தில் உணர்த்திவிடும்.

RangaRakes
Tamilnavarasam.com

## கற்பு

- அழகு பெண்ணிற்குப் பெருமை தருகிறது; கற்பு அவளுக்கு அளவற்ற மதிப்பு தருகிறது. அடக்கம் அவளைத் தெய்வமாக்குகிறது.
  - ஷேக்ஸ்பியர்

- அழகுக்கும் கற்புக்கும் இடைவிடாத போர் நடந்துகொண்டே இருக்கும்.
  - ஸ்பெயின்

- அடக்கம், சத்தியம், கற்பு மூன்றும் பெண்களைப் பாதுகாக்கும் தேவதைகள்.
  - ஹால்டன்

- ஒழுக்கமுள்ள பெண் கணவனுக்கு அரச மகுடம்.
  - பைபிள்

- பெண்ணின் கற்பு கண்ணாடிப் பாத்திரம் போன்றது.
  - காண்டேகர்

- கற்புடைய கன்னியும், நொண்டியும் வீட்டிலேயே இருப்பது மேல்.
  - ஸ்பெயின்

- கற்புள்ள ஒரு பெண்ணைப்பற்றி அவதூறாகப் பேசுவதைவிட, ஒரு கோயிலை இடிப்பது குறைந்த பாவமாகும்.

- குற்றமற்ற அழகான கற்புடைய மங்கையர் மாணிக்கத்திற்குச் சமம்.
  - பெல்ஜியம்

- பெண்ணிற்குக் கற்பு என்பது கணவன் சொல்லுக்கு மாறுபடாமல் இருப்பது தான்.
  - யாரோ

- கற்பென்னும் கலங்காத நிலை ஒரு பெண்ணுக்கு அமைந்திருக்கு மானால், அப் பெண்ணை விடப் பெருமையுடையவை வேறெதுவும் இல்லை.
  - திருவள்ளுவர்



## கணவன்

- நீ உன் மனைவியை நேசித்தால், அவள் உறவினரையும் நேசிக்க வேண்டும்.
  - இஸ்ரேல்

- மனிதன், தன் மனைவியைத் தவிர, மற்ற எதைப் பற்றி மற்றவர் பேசினாலும் பொறுத்துக் கொண்டிருப்பான்.
  - பாரசீகம்

- ஒருவனின் தாய், அவன் மனைவிக்குப் பேய்.
  - ஜெர்மன்

- பெண்ணின் வாழ்வு என்பது கணவனின் அன்பே.
  - ஜெர்மன்

- கணவனுக்கு - குணத்திற்கு முன்னால் அறிவு தேவை; மனைவிக்கு - அறிவுக்கு முன்னால் குணம் தேவை.
  - ஜெர்மன்

- ஒரு மனிதனின் நல்லதும், கெட்டதும் அவன் மனைவிதான்.
  - ஸ்பெயின்

- உன்னை அடக்கியாளப் பழகு; பிறகு உன் மனைவியைச் சுலபமாக அடக்கி விடலாம்.
  - யாரோ

- பெண் எனும் பேதையின் பிணிகளைக் குணப்படுத்தும் பிளாஸ்திரி கணவன்.
  - மோலியர்

- கணவர்களை அடக்கியாள முடியாது; சுடு தண்ணீர் போட்டுக் காயவைத்தாலும் மிருதுவாக மாட்டார்கள்.
  - பார்க்கர்

- மனைவி தனக்காக வாழ்பவள் என்று எண்ணிக்கொண்டு, அவளுக்காக வாழும் மனிதப் பிறவியே கணவன்.
  - ஷா

RangaRakes Tamilnavarasam.com

## காதல்

❒ பரிசுத்தமான இதயம், பெண்ணின் பெருமை வாய்ந்த பரம்பரைச் சொத்து. காதல் அவளது அழகிய ஆபரணம்.

- கிளாடியஸ்

❒ காதலில் தேனும் கசப்பும் கலந்தே இருக்கிறது.

- பிளாட்ஸ்

❒ நற்குணம் கொண்ட பெண்ணின் காதலைப் பெற்றவன், ஒவ்வொரு தீய செயலையும் கண்டு நாணமடைவான்.

- வோகல்

❒ காதல் நோய்க்கு வைத்தியம் இல்லை.

- ஆப்பிரிக்கா

❒ தூக்கம் வந்து விட்டால் தலையணை தேவையில்லை; காதல் வந்து விட்டால் அழகே தேவையில்லை.

- ஆப்கானிஸ்தானம்

❒ வானத்தில் பறவையின் பாதையைக் காண முடியாது; காதலியை நாடும் காதலன் பாதையையும் காண முடியாது.

- எஸ்தோனியா

❒ காதல் - கல்யாணத்தின் சூரியோதயம்.

- பிரெஞ்சு

❒ ஒருத்தி இனிமையாக இருக்கிறாள் என்பதற்காகக் காதலிக்காதே.

- ரஷ்யா

❒ காதலின் தூதுவர்கள் கண்கள்.

- இலத்தீன்

❒ இசைக் கருவியைப் போல காதலியை மீட்டி விட்டு, உயரே தூக்கி வைத்துவிட முடியாது.

- ஜெர்மன்

❒ காதலின் கண்ணுக்கு ரோஜாதான் தெரியும்; முட்கள் தெரியாது.

- ஜப்பான்



❒ காதல் வயப்பட்டுத் திருமணம் செய்து கொள்கிறவன், துன்பத்துடன் வாழ்ந்து தான் ஆக வேண்டும்.

- ஸ்பெயின்

❒ என்னுடைய காதலியின் மகிழ்ச்சியை என்னுடையதாகக் கருதுகிறேன். என்னுடைய ஆனந்தத்தை அவளுடையதாகக் கருதுகிறேன். இது தான் காதலின் ரசம்.

- வால்டேர்

❒ காதல் நோய்க்கு மாற்று மருந்துண்டு. அதுவே திருமணம்.

- ரோலண்டு

❒ காதல் உணர்ச்சி ஏற்படும் காலத்து, உடலில் பன்மடங்கு சக்தியும், வாழ்வில் சுவையும், முன்பைவிட அதிகமாக உணர்கிறோம்.

- ஆல்ட்ஸ் ஹக்ஸ்லி

❒ காதல் விவகாரங்கள் ஒரே மாதிரியானவை; காதல் புரியும் மக்கள் தான் வெவ்வேறு வகையானவர்கள்.

- விமன்ஸ் கம்பானியன்

❒ சுலபமாக வெற்றி பெறும் காதலில் கவர்ச்சியில்லை; தடைகள் தான் காதலுக்கு அதிக மதிப்பைக் கொடுக்கிறது.

- வோகல்

❒ பெண்களின் அழகிய தோற்றமல்ல, பெண்களிடமுள்ள வாஞ்சை தான் என் காதலைப் பெறும்.

- ஷேக்ஸ்பியர்

❒ காதலைப் பொறுத்தவரை பெண் வீணையைப் போன்றவள்; தந்திகளை மீட்கத் தெரிந்தவனுக்குத்தான் வீணை தன் ரகசியங்களை வெளியிடும்.

- பால்ஸாக்

❒ காதல் என்பது, பணக்காரர்களின் நிலாச் சோறு.

- அறிஞர் அண்ணா

❒ ஊனையும் உணர்வையும் உயிரையும் தாண்டி அப்பால் தொடரும் அன்பே காதல்.

- நாமக்கல் கவிஞர்

RangaRakes Tamilnavarasam.com

- ❒ பூதலந் தன்னையே கையேந்தலாம், பொங்கிய காதலால் வான் நீந்தலாம்.

  \- கம்பதாசன்

- ❒ கண்ணுள்ளார் காதலவராகக் கண்ணும் எழுதேம் கரப்பாக்கு அறிந்து.

  \- குறள்

- ❒ திருமணம் செய்து கொண்ட இளம் தம்பதிகள் ஒருவரை ஒருவர் உள்ளன்புடன் நேசிக்கவேண்டும்.

  \- வாரியார்

## காலம்

- ❒ நீங்கள் விதைக்கும் விதைகளைப் போல, நீங்கள் விதைக்கும் காலத்தையும், பொறுத்து அறுவடை அமைகிறது

  \- சாயிபாபா

- ❒ காலமும் இடமும் உன்னிடத்தில்தான் உள்ளது. அதேபோல் முன்னேற்றமும் உன்னிடத்தில்தான் உள்ளது.

  \- மாஜினி

- ❒ காலம் நதியைப் போன்றது; ஓடுகின்ற நதியின் நீரைத் தொடுகிறாய்; கடந்து சென்ற நீரின் கடைசிப் பகுதியாகவும்; வந்து கொண்டிருக்கும் புது நீரின் முதற் பகுதியாகவும் நீ தொட்ட நீரைக் கருதலாம். காலமும் அப்படித்தான்.

  \- டாவின்சி

- ❒ இறந்த காலத்தைப் பற்றித் தெரிந்து கொண்டால், எதிர்காலம் தானாகப் புலப்படும்.

  \- கன்பூசியஸ்

- ❒ எதிர்காலத்தை நீ விரும்பினால் நிகழ்காலத்தில் ஒன்றும் மிச்ச மில்லாமல் எல்லாவற்றையும் நீ தியாகம் செய்துவிட வேண்டும்.

  \- மாக்சிம் கார்க்கி

RangaRakes



- ❒ தயவு செய்து மதிப்புமிக்கதான உன்னுடைய பொழுதை வீணடிக்காதே எளிமையாக, தூய்மையாகக் கபடமின்றி இரு, அடர்ந்த பிரார்த்தனை மூலம் ஆண்டவன் ஒருவனிடம் மட்டுமே அயராத நம்பிக்கை கொண்டிரு.

  \- சுவாமி பஜனானந்தர்

- ❒ நேற்றைய ஏட்டைப் புரட்டிப் பார் வாழ்க்கைக்கும் மக்களுக்கும் நீ கடமைப்பட்டிருப்பது புரியும்.

  \- கலீல் கிப்ரான்

- ❒ பணத்தை இழந்தால் குறைந்த இழப்பு; நேரத்தை இழந்தால் எல்லாமே இழப்பு.

  \- அர்மீனியா

- ❒ காலத்தை வீணாக்குவது போன்ற சுலபமான காரியமும் இல்லை. திருத்துவது போன்ற சிரமமான காரியமும் இல்லை.

  \- யாரோ

- ❒ ஞாலங் கருதினுங் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்.

  \- குறள்

- ❒ நேரத்தை வீண்செய்யாதீர்கள் காலமே இறைவன்

  \- சாயிபாபா

## குடும்பம்

- ❒ தன் சக்திக்கு மேலான குடும்பத்தில் பெண் கொள்கிறவன் தன் சுதந்திரத்தை விற்று விடுகிறான்.

  \- மாசிக்கர்

- ❒ துன்பங்களை மனம் புண்படாதபடி மாற்றுவதே உண்மையான இல்லறம்.

  \- ஷெல்டன்

Tamilnavarasam.com

❒ இடியையும் புயலையும் ஒரு மனதாக அனுபவிக்கிற மனிதன், குடும்பமென்னும் பெருங்கடலைச் சுலபமாகக் கடந்துவிட முடியும்.

- ஷா

❒ பிரம்மசாரிக்குத் தன்னுடைய நலம்தான் முக்கியம்; குடும்பஸ்தருக்குத் தன்னுடைய குடும்பத்திலுள்ள எல்லாருடைய நலனும் முக்கியம்.

- எஸ். ஏ. பி.

❒ இல்லறத்தில் இன்பத்தையே எதிர்பாராதே! துன்பச் சூழலையும் சஞ்சலங்களையும் ஒதுக்கி விட்டால்...? உயர்ந்த மலையிலேயே பயங்கரமான நீர்ச்சுனைகளும், அடர்ந்த புதர்களும் இல்லாமல் போகுமா?

- இங்கர்சால்

❒ ஆண்கள் விருட்சங்கள்; பெண்கள் அதைத்தழுவி நிற்கும் மென்கொடிகள்; குழந்தைகள் அக்கொடியிலேயே மலரும் மலர்கள்.

- இங்கர்சால்

❒ ஒழுக்கத்தின் அன்பே வேலி; மனைவியும் குழந்தைகளும் ஆண் மனத்துக்கு வேலி; வளரும் குடும்பப் பயிருக்கு ஆடவன் தியாகமே வேலி.

❒ பசி, காமம், அன்பு, அகம்பாவம் என்ற நான்கு தூண்களில் குடும்பம் கட்டப்படுகிறது. இதில் ஒரு தூண் ஆடினாலும் குடும்பம் கலைய ஆரம்பிக்கும். பசியைப் போக்குவதற்கு வருமானம், காமத்தைத் தீர்ப்பதற்கு விவாகம், அன்பை வளர்க்கக் குழந்தைகள், அகம் பாவத்தைப் பெருக்குவதற்கு உறவினர்கள்.

- க. சந்தானம்

❒ கணவனுக்கு உலகமெல்லாம் வீடு; ஆனால், பெண்ணிற்கு வீடுதான் உலகம்.

- தாகூர்

❒ குடிசையிலே பணம் இருக்காது; மெத்தை வீட்டிலே சுகம் இருக்காது.

- தி. ஜானகிராமன்

❒ வீட்டில் தாயும் இல்லாமல், கொடிய மனைவியும் வாய்த்தால், அவன் காட்டிற்குப் போகலாம். காடும் வீடும் அவனுக்கு ஒன்றே.

- யாரோ



❒ மாமன் மாமி இல்லாத வீடு மங்கள பவனம்
நாத்தி இல்லாத வீடு நாரத பவனம்
உறவினர் தொல்லை இல்லாத வீடு உல்லாச பவனம்
விருந்தினர் தொல்லை இல்லாத வீடு விலாச பவனம்
குடக்கூலிக்கு இல்லாத வீடு குபேர பவனம்
சர்க்கார் காரியாலயம் இல்லாத வீடு சாந்திபவனம்.

- சுகி

❒ ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும் இழுக்கார் குடிப்பிறந் தார்.

- குறள்

❒ நல்ல குடும்பங்களில் தான் சோதனைகள் ஏற்படுகின்றன.

- இங்கிலாந்து

❒ கிழக்கோ மேற்கோ தன் வீடே தனக்கு இன்பம்.

- விவேகானந்தர்

❒ குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

❒ கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

- பழமொழி

## குழந்தை

❒ குழந்தைக்குத் தாய் நங்கூரம்; அவள் இருக்கிற இடத்தைவிட்டு அசையவே முடியாது.

- அமெரிக்கா

❒ குழந்தைகள் தெய்வத்தோடு பேசுகின்றன.

- ஆப்பிரிக்கா

❒ கேள்விகள் கேட்கும் குழந்தை மூடக் குழந்தையன்று.

- ஆப்பிரிக்கா

RangaRakes Tamilnavarasam.com

❑ தாய், தந்தை செல்லாத பாதையில் நீ செல்லாதே.
- ஆப்பிரிக்கா

❑ குழந்தைகளுக்குச் செவிகள் அகலமானவை; நாக்கு நீளமானவை.
- இங்கிலாந்து

❑ குழந்தைகள் ஏழையின் செல்வங்கள்.
- இங்கிலாந்து

❑ குழந்தைகள் முதலில் தாய்ப்பால் குடிக்கின்றனர். வளர்ந்தபின் தந்தையிடம் அறிவுப்பால் குடிக்க வேண்டும்.
- இங்கிலாந்து

❑ குழந்தைக்கு முதற் பாடம் துணிவு.
- இங்கிலாந்து

❑ தீப்பட்ட குழந்தை நெருப்புக்கு அஞ்சும்.
- இங்கிலாந்து

❑ முதலாவது செல்வம் குழந்தைகள்; இரண்டாவது பணம்.
- இங்கிலாந்து

❑ தூங்கும்போது சிரிக்கும் குழந்தை தேவர்களுடன் விளையாடுகிறது.
- இங்கிலாந்து

❑ அருமையான குழந்தைக்கும் பிரம்பு தேவை.
- இந்தியா

❑ பயமின்றி வளர்க்கப்படும் பெண் குழந்தை பெருமை இல்லாமல் இறக்கும்.
- எஸ்தோனியா

❑ தாய் இருக்கும் இடத்தில் தான் ஒரு குழந்தைக்கு சொர்க்கம்.
- சீனா

❑ சிறு குழந்தைகள் ஒரு தலைமுறை; பெரிய குழந்தைகள் ஒரு தலைவலி!
- போர்த்துக்கீசு



❑ முதல் குழந்தை பெண் குழந்தை என்றால் அவளுக்கு அதிர்ஷ்டம் உண்டு.
- போர்த்துக்கீசு

❑ குழந்தையைத் தூக்கி வைத்துக்கொள்ளக் கை நோகிறது. ஆனால் அதைக் கீழே இறக்கிய பின் மனம் நோகிறது.
- போலந்து

❑ குழந்தை பெற்றெடுத்தவன் தான் முழு மனிதன்!
- ரஷ்யா

❑ குழந்தை இல்லாதவன் மகிழ்ச்சியை அறியான்.
- ஜெர்மன்

❑ தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது.
- குறள்

❑ குழந்தைப் பருவ இதயத்தை எவன் இழக்காமல் இருக்கிறானோ உயர்ந்த மனிதன்.
- யாரோ

## சந்தேகம்

❑ சிறு சந்தேகம் கூட காதலன் நெஞ்சில் இருண்ட துயரங்கள் தருவன. சந்தேகம் நுழையும் வாசல் வழியே காதலும் நம்பிக்கையும் வெளியேறுகின்றன.
- யங்

❑ கோழையின் குணம் சந்தேகம்.
- ஹெர்பர்ட்

❑ சந்தேகம் ஏற்படும்போது மனத்தைக் கட்டுப்படுத்திக்கொள்.
- சோரஸ்தர்

RangaRakes Tamilnavarasam.com

❒ துயரத்தின் சகோதரப் பேய்க்குச் சந்தேகம் என்று பெயர்.
- ரெய்லி

❒ ஆத்மாவிற்கு நரகம் வேண்டுமானால் சந்தேகப்படு.
- ஹாஸ்பரின்

❒ துக்கத்தைவிட மிகவும் நச்சு தோய்ந்தது சந்தேகம்.
- டென்காம்

❒ ஜயமுற்றவன் அழிவுற்றான்.
- கீதை

## திருமணம்

❒ ஆண் பெண் இருவரும் ஒருமனப்பட்டு வாழும் கல்விக் கூடம் திருமண வாழ்க்கை. இதைவிடச் சிறந்த கல்வி உலகில் இல்லை.
- ஷா

❒ கணவன் தலை; மனைவி இதயம் - இப்படியுள்ள திருமணம் இன்பமானது.
- எஸ்தோனியா

❒ திருமணம் என்பது முற்றுகையிடப்பட்ட கோட்டை; உள்ளே இருப்பவர்கள் வெளியே வர விரும்புகிறார்கள்; வெளியே இருப்பவர்கள் உள்ளே போக விரும்புகிறார்கள்.
- கு. ராஜவேலு

❒ உன் மனைவியைக் கண்களால் தேர்ந்தெடுப்பதை விடுத்து காதால் தேர்ந்தெடு.
- ரஷ்யா

❒ திருமணத்திற்குப் பெண் தேடி வெகுதூரம் செல்பவன் யாரையோ ஏமாற்றப்போகிறான் அல்லது ஏமாறப் போகிறான்.
- இங்கிலாந்து



❒ திருமணமாகும் முன் இரண்டு கண்களையும் திறந்து வைத்துக்கொள்; ஆனபின் ஒன்றை மூடிக்கொள்.
- ஆபிரிக்கா

❒ மணவாழ்வு என்பது ஒரு சரித்திரப் புத்தகம்; அதன் ஏடுகளைப் புரட்டினால் சண்டையும் சமாதானமும் மாறி மாறி வரும்.
- அரு. ராமநாதன்

❒ நாள் முழுதும் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டுமானால் திருமணம் செய்துகொள்.
- ஜப்பான்

❒ திருமணம் என்பது கட்டளையாக இருக்கக் கூடாது; நிர்ப்பந்தமும் இருத்தலாகாது. பரஸ்பர அன்பும், சம்மதமும் இருக்க வேண்டும். காதலர் ஒருமித்து வாழ்வதே இன்பம்.
- அறிஞர் அண்ணா

❒ திருமணம் என்பது வெறும் உடற்சேர்க்கையன்று; அது உணர்ச்சிகளின் சேர்க்கை வாழ்க்கை என்பது உள்ளங்களின் சேர்க்கை.
- வி. ஸ. காண்டேகர்

❒ திருமணம் தும்மல் போன்றது. எப்போது வரும் என்று சொல்ல முடியாது.
- ரஷ்யா

❒ காதலர்கள் திருமணம் செய்துகொண்டால், கனவு உலகம் மறைந்து உண்மை உலகம் புலனாகிறது.
- ரோத்போன்

❒ நீ துன்பப்பட வேண்டுமானால் உன்னை விடப் பணக்காரியை மணந்துகொள்.
- மைக்லெட்

❒ திருமணம் என்பது குலப்பெருமை கிளர்த்தும் படலம்.
- புதுமைப்பித்தன்

RangaRakes Tamilnavarasam.com

❑ திருமணம் என்பது நகையா? இசையா? பந்தரா? மாலையா? கூட்டமா? விருந்தா? மனம் ஒன்றாத இடத்தில் மணமேது? மகிழ்வேது? நாயகன் நாயகி மனம் ஒன்றுவதே மன்றலாகும்.

- திரு. வி. க.

❑ பெண் எடுக்கும் இடத்தைக் கறவைப் பசுவாக நினைப்பது மனிதர்களின் வழக்கம்.

- அகிலன்

## பணம்

❑ எப்படிப்பட்ட முட்டாளும் பணத்தைச் சம்பாதித்துவிடலாம். ஆனால் அதை ஒரு புத்திசாலி மட்டுமே காப்பாற்ற முடியும்.

- அமெரிக்கா

❑ பணம் பல நன்மைகளுக்கு உபயோகப்படுவது போல, பல தீமைகளுக்கும் காரணம் ஆகிறது.

- வசந்த் தேசாய்

❑ சின்னஞ்சிறு செலவுகளைப் பற்றிக் கவனமாக இருங்கள்; சிறிய ஓட்டை கப்பலையே கவிழ்த்து விடும்.

- பெஞ்சமின் பிராங்களின்

❑ ஈட்டி எட்டு முழம் பாயும்; பணம் பாதாளம்மட்டும் பாயும்.

- இந்தியா

❑ பணம் உண்டானால் முயற்சியுண்டு; வலிமையுண்டு.

- இந்தியா

❑ பணக்காரனுக்குப் பின்னும் பத்துப்பேர்; பைத்தியக்காரனுக்குப் பின்னும் பத்துப்பேர்.

- இந்தியா

❑ மனித குலத்திற்குத் தீராத நோய் ஒன்று பிடித்திருக்கிறது; மாறாத சாபம் இறங்காத நச்சு; இதன் பெயர் பணம்.

- பாரதியார்



❑ பணம் பேசுகிறது; நாய்கள் குரைக்கின்றன.

- அங்கேரியா

❑ பண்பிற்குப் பெரும் பகை செல்வம்.

- இங்கிலாந்து

❑ பணம் இல்லாத பைக்கு வெறும் தோல் என்று தான் பெயர்.

- இங்கிலாந்து

❑ பணம் இல்லாதவன் பிணம்.

- இந்தியா

❑ செல்வத்தை எல்லாரும் குறை கூறுகிறார்கள், ஆனால் அதை யாரும் வெறுப்பதில்லை.

- டென்மார்க்

❑ பணக்காரனின் கைகள் நீளமானவை; ஆனால், அவை தேவலோகத்தை எட்டா.

- திபெத்

❑ பணத்தில் நான்கில் ஒரு பகுதியை மகிழ்ச்சியாகச் செலவிட வேண்டும். இரு பகுதிகளைத் தொழிலில் ஈடுபடுத்த வேண்டும். நான்காம் பகுதியைச் சேமிக்க வேண்டும். அது ஆபத்துக்கு உதவும்.

- பர்மா

❑ பணம் சம்பாதிப்பவன் பெரிய மனிதனல்லன்; அதைப் பாதுகாப்பவனே பெரிய மனிதன்.

- பின்லாந்து

❑ பணம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்வதாக நினைப்பது தவறு; அது நம் தேவைகளைப் பெருக்கவே செய்கிறது.

- பின்லாந்து

❑ கடன் இல்லாதவனே பணக்காரன்; உடல் ஆரோக்கியம் உள்ளவனே செல்வன்.

யூகோஸ்லேவியா

❑ பணம் பேசத் தொடங்கும்போது, உண்மை ஊமையாகிவிடும்.

- ரஷ்யா

❑ பணக்காரன் வீட்டில் சோறு வெந்து கொண்டே இருக்க வேண்டும்.

- ருமேனியா

RangaRakes
Tamilnavarasam.com

❒ நாணயமே உண்மையான பெருமை.
- இலத்தீன்

❒ பணம் சேர்க்கும் வழி நியாயமாய் இருத்தல் வேண்டும்.
- யாரோ

❒ தன் உடலைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எவ்வளவு பொருள் தேவைப்படுகிறதோ அவ்வளவு பொருளைத்தான் தன்னுடையதாக ஒருவன் கருத வேண்டும். அதற்கு மேல் உள்ளதைத் தன்னுடைய பொருளாகக் கருதுபவன் தண்டைக்குரிய திருடனாவான்.
- பாகவதம்

❒ பணக்காரன் வீட்டுப் படிக்கட்டில் ஏறாதீர்கள்; உங்களுக்காக அங்கே அவ மரியாதை காத்துக் கொண்டிருக்கிறது.
- யாரோ

## பெண்

❒ பெண்ணின் வாழ்க்கை முரண்பாடு நிறைந்த ஒரு வரலாறு.
- ஆப்பிரிக்கா

❒ பெண்கள் இருக்குமிடத்தில் பேச்சு இருக்கும்; வாத்துகள் இருக்குமிடத்தில் கொக்கரிப்பு இருக்கும்.
- அயர்லாந்து

❒ மணமாகாத பெண்ணிற்கு ஒரு சிறகில் ஊனம்.
- அரேபியா

❒ மனமாரக் காதலிக்கும் பெண்கள் மத்தியில் ஆண்கள் பச்சைக் குழந்தைகள்
- தாகூர்

❒ பெண்ணுக்குத் தெரிந்த ரகசியம், ஊரெல்லாம் அறிந்த விஷயம்.
- இந்தியா



❒ அழகிய மங்கை மகிழ்ச்சியடைந்தால், பணப்பை கண்ணீர் விடத் தொடங்கும்.
- இங்கிலாந்து

## இங்கிலாந்துப் பழமொழிகள்

❒ அழகிய பெண்ணும், கிழிந்த ஆடையும் எந்த ஆணியிலும் மாட்டிக் கொள்ளும்.

❒ நீண்ட முடி அழகிய பெண்களுக்கு ஒரு கருவூலம்.

❒ ஆயிரத்தில் ஒரு நல்லவனை அறிந்து கொள்ளலாம்; ஆனால், ஒரு பெண்ணை அறிந்து கொள்ள இயலாது.

❒ ஒரு பெண்ணையோ, ஊர்தியையோ தொடர்ந்து கிடைக்கவில்லையே என்று ஓட வேண்டாம். பின்னால் வேறு கிடைக்கும்.

❒ பெண் குழந்தை இல்லாதவனுக்கு அவனைப் பற்றி அறிய முடியாது.

❒ வானின் அழகு விண்மீன்களில் உள்ளது; பெண்ணின் அழகு கூந்தலில் உள்ளது.

## இந்தியப் பழமொழிகள்

❒ பெண்குலப் பெருமை - பெண் குழந்தைகளை வளர்க்கும் அருமை.

❒ பெண்ணின் கோணல் பொன்னிலே தெரியும். பெண் என்றால் பேயும் இரங்கும். பெண்ணிற்குச் சத்துரு அழகு.

❒ பெண்ணின் வடிவழகைவிட அறிவழகே மிகவும் கவர்ச்சியானது.

❒ வயதாகியும் கன்னியாய் இருக்கும் பெண் அஞ்சற் பெட்டியில் சேர்க்கப்படாத கடிதம்.

❒ வானம் பார்த்த பூமியும், மானம் பார்க்காத பெண்ணும் அதிகம் பயன்படமாட்டா.

❒ பெண்கள் ஒழுக்கத்தில் நம்பிக்கை கொள்வதே குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படுவதற்கு அடிப்படை.
- யாரோ

RangaRakes Tamilnavarasam.com

- கெட்டிக்காரப் பெண், தான் காதலிப்பவனை விட்டுத் தன்னைக் காதலிப்பவனையே மணப்பாள்

  - செக்கோஸ்லோவாகியா

- பெண் உலகில் செய்ய வேண்டியதெல்லாம், ஒரு மகளாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், தாயாகவும் தன் கடமைகளை நிறைவேற்ற வேண்டியதே ஆகும்.

  - யாரோ

- பெண்கள் சாத்தானின் சாட்டைகள்.

  - போலந்து

- பெண், ஆடவனுக்குக் காட்டக் கூடிய ஆழ்ந்த அன்பு அவன் தன் கடமையைச் செய்வதற்கு உதவியாக இருப்பதே.

  - யாரோ

## நம்பிக்கை

- உறுதியுள்ளவன் உள்ளத்தில் திடமுள்ளவன்; உலகத்தை தனக்கு வேண்டிய முறையில் அமைத்துக் கொள்கிறான்.

  - கதே

- அச்சமற்று இருப்பதுதான் தைரியம் என்பது சரியல்ல. நீதிக்காகப் போராடும் உள்ள உறுதி தான் தைரியம் எனப்படும்.

  - புளூடார்க்

- மனதை விலாசப்படுத்தும் நம்பிக்கையே வாழ்வை வளப்படுத்தும்.

  - யாரோ

- செயலில் ஈடுபடாத நம்பிக்கை, பட்டினி தருவது நிச்சயம்.

  - யாரோ

- எவர் துயர்பட்டாலும், எந்தத் துயராக இருந்தாலும் அதற்கு நம்பிக்கையே மருந்து.

  - யாரோ



- நம்பிக்கை உறுதியாக இருக்கும்போது பிரார்த்தனை நீண்டதாக இருக்கத் தேவையில்லை.

  - யாரோ

- மனிதன் ஆவதும் நம்பிக்கையாலே, அழிவதும் நம்பிக்கையாலே.

  - எஸ். ஏ. பி.

- ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும்; நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே இருக்கும்.

  - அரேபியா

- முயற்சி இல்லாத நம்பிக்கை, கப்பல் இல்லாத கடல் யாத்திரை.

  - பர்மா

- பணத்திடம் நம்பிக்கை வைக்காதே நம்பிக்கையிடம் பணத்தைப் போட்டு வை.

  - பிரெஞ்சு

- செயலுக்கும் கருத்துக்கும் மாறுபாடு உள்ளவனிடத்தில் தன்னம்பிக்கை இருக்காது.

  - யாரோ

- நீங்கள் ஆர்வத்துடன் உங்கள் கடமையில் மூழ்கியிருக்கும் பொழுது தான், வெற்றியைப் பெற்றுவிடலாம் என்ற தன்னம்பிக்கை உங்களிடம் தளிர்விட்டுத் துளிர்க்கிறது.

  - டேவிட் ஜே. ஸ்பார்ட்ஸ்

- இன்றைய தினம் நம்பிக்கையிலுள்ளது நாளை நடப்பது இறைவனிடத்தில் உள்ளது.



RangaRakes
Tamilnavarasam.com

## மனிதன்

❑ இயற்கையை ஊடுருவி துருவித் துருவி ஆராயவே மனிதன் பிறந்திருக்கிறான்; கண்மூடிக் கிடப்பதற்கல்ல.
- ஸ்டாலின்

❑ இலட்சியம் இல்லாத மனிதன் மனிதனே அல்லன்; இலட்சியத்திற்காகப் பாடுபடாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையே ஆகாது.
- மாஜினி

❑ முன்னேறுவதே மனிதருக்குரிய சிறப்புத் தன்மை; இது வேறெதற்கும் இல்லை.
- இராபர்ட் பிரௌனிங்

❑ மனிதனின் புகழ் அவனது திறமையைக் காட்டும் அளவுகோலன்று; சந்தர்ப்பங்களால் ஏற்படுவது. அதை, மனிதனின் சொத்து எனக் கூறிவிட முடியாது.
- தாமஸ் கார்லைல்

❑ மனிதனிடம் பணம் தலை வணங்கிப் பணியாற்றும்; அல்லது தலைகுப்புறத் தள்ளிவிடும்.
- ஹேம்ஸ்

❑ ஒரு மனிதனை அவனுடைய சூழ்நிலை உருவாக்குவது இல்லை. அவனுடைய மனம் தான் உருவாக்குகிறது.

❑ மனிதனைக் கவனித்துப் பார். அவன் தான் ஓர் உயிருள்ள கதை.
- விவேகானந்தர்

❑ மனிதன் பிறப்பது இன்பத்தில்; இறப்பது துன்பத்தில். வளர்வது இயற்கையில்; வாழ்வது செயற்கையில்...
- குரு

❑ தன்னை அடக்கப் பழகிக்கொண்டவன் புறத்தே உள்ள எதற்கும் வசப்பட்டவன் அல்லன். அத்தகைய மனிதனே நன்கு வாழத் தெரிந்தவன்.
- விவேகானந்தர்



## மனைவி

❑ கணவன் வருவாய்க்குத் தகுந்தவாறு குடும்பம் நடத்துபவள் மனைவி; நல்ல பண்பும், நற்புதல்வருமே மனைவியின் அணிகலன்கள்.
- ஷா

❑ மனைவி வயலின் இல்லை; வாசித்தபின் சுவரில் உங்கள் விருப்பப்படி தொங்கவிட முடியாது.
- ரஷ்யா

❑ மனைவி போடும் கணக்கு நான்கு; கவலையைக் கூட்டுபவள்; துன்பங்களைப் பெருக்குபவள்; பணத்தைக் கழிப்பவள்; நண்பர்களை வகுப்பவள்.
- ஷா

❑ கணவனுக்கு இசைந்து நடக்கும் மனைவிதான் அந்த வீட்டில் உண்மையான அதிகாரம் வகிக்கிறாள்.
- ஷா

❑ அழகிய மனைவியை உடையவனுக்கு இரண்டு கண்களுக்கு மேல் தேவை.
- இங்கிலாந்து

❑ மேனி மினுக்கியை மனைவியாய்க் கொண்டவனும், மேட்டிலே பயிர் இட்டவனும் கெடுவான்.
- இந்தியா

❑ மனைவி இளைஞருக்கு நாயகி; முதியோருக்குத் தாதி.
- இங்கிலாந்து

❑ பணிவற்ற மனைவி, பகைவர்க்கு ஈடாவாள்.
- இந்தியா

❑ முதல் மனைவி மனைவியாய் இருப்பாள்; இரண்டாம் மனைவி வீட்டின் எஜமானியாய் இருப்பாள்; மூன்றாம் மனைவி சிலுவை போல் கும்பிட வைப்பாள்.
- பல்கேரியா

❑ ஊமையான மனைவி கணவனிடம் அடிபடுவதே இல்லை.
- பிரெஞ்சு

RangaRakes Tamilnavarasam.com

❐ இளம் மனைவி, தன் வீட்டில் நிழலாகவும், எதிரொலியாகவும் இருக்க வேண்டும்.
- ஜப்பான்

❐ மனைவியை ஆள்வதைவிட, அரசு ஒன்றை ஆள்வது வெகு சுலபம்.
- இங்கிலாந்து

❐ தாரமும், தூக்குத் தண்டனையும் தலைவிதியால் நேருகின்றன.
- ஷேக்ஸ்பியர்

❐ குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பவள் காவிய மனைவியாவாள்.
- ஜெர்மன்

❐ மனைவியிடம், இல்லறம் என்னும் குடும்ப வாழ்விற்குரிய நற்குணங்கள் அமைந்திராவிடில், அந்தக் குடும்ப வாழ்க்கை எவ்வளவு தன் சிறந்திருப்பினும் பயனற்ற வாழ்க்கையே யாகும்.
- திருவள்ளுவர்

## வாழ்க்கை

❐ மனித வாழ்வு, குழந்தையின் கையிலிருக்கும் முட்டை போன்றது.
- ருமேனியா

❐ அன்பும், மனைவியும் சிறப்பாக அமைவது தான் சிறந்த வாழ்க்கை.
- ஜப்பான்

❐ தகாத மனைவியுடன் ஏற்பட்ட வாழ்க்கை கண்ணில்பட்ட தூசி போலவும். செருப்பில் சிக்கிய கல்லைப் போலவும் இருக்கும்.
- ஜெர்மன்

❐ வாழ்க்கை என்பது வழிபாடு; வாழ்க்கை என்பது கோயில்; தியாகம் என்பது அதன் அடிப்படை.
- வி. ஸ. காண்டேகர்

RangaRakes



❐ வாழ்க்கை என்பது மலர்; காதல் அதனுடைய தேன்.
- விக்டர் ஹ்யூகோ

❐ வாழ்க்கை என்பது, குறைவான தகவல்களை வைத்துக் கொண்டு சரியான முடிவுக்கு வரும் கலை.
- சாமுவேல் பட்லர்

❐ உழைப்பு, துக்கம், மகிழ்ச்சி - ஆகிய மூன்றையும் அனுபவிக்கப் பிறந்தவன் மனிதன். இந்த மூன்றும் இல்லாத வாழ்வு சரியான வாழ்வாகாது.
ஆப்பிரிக்கா

❐ மனித வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளில் திருமணமே தலை சிறந்தது. இதில் பிறருக்குத் தலை நீட்ட இடமே கிடையாது. ஆனால், மணமக்களைச் சிறிதும் கலந்து கொள்ள விடாதபடி பிறர் தலை கொடுக்கும் (முன் நின்று நடத்தும்) நிகழ்ச்சி திருமணந்தான்.
- ஷெல்டன்

❐ அச்சம் தவிர்ந்தது வாழ்வு - நல்ல
அன்பில் விளைவது வாழ்வு
மச்சினில் வாழ்பவரேனும் - அவர்
மானத்தில் வாழ்வது வாழ்வு.
- பாவேந்தர் பாரதிதாசன்

❐ வாழ்க்கை தான் எல்லாம்.
- உமர்கய்யாம்

❐ வாழ்க்கையில் நமக்கு நல்ல உடல் நலமும், போதிய வருவாயும் - அத்துடன் நல்ல நண்பர்களும் தேவை.
- ஸ்டீபன்சன்

❐ வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க உதவும் திறனே கல்வி.

❐ வாழ்க்கை என்பது கோயில்; தியாகம் என்பது அதன் அடிப்படை.

❐ வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள், அழிவில்லாத வாழ்வைத் தெரிந்து கொள்வதாகும்.
- யாரோ

Tamilnavarasam.com

# வள்ளுவம் காட்டும் இல்லறம்

## இல்வாழ்க்கை

◆ இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. 1

❒ இல்லற வாழ்வில் ஈடுபடுபவனே - அறவழியில் நடக்கும் பிரம்மச்சாரி, தவநெறியில் ஈடுபடுபவர், முற்றும் துறந்த ஞானி ஆகிய மூவருக்கும் நல்ல வழித்துணையாவான்.

◆ துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை 2

❒ கைவிடப்பட்டவர்களுக்கும், வறுமையில் வாடுவோர்க்கும், யாரும் துணையின்றி இறந்தவர்க்கும், இல்லறம் நடத்துபவனே துணையாவான்.

◆ தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. 3

❒ தமது முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றம், தான் என்னும் ஐவருக்கும் செய்யத்தக்க கடமைகளைச் செய்வதே இல்லறத்தில் ஈடுபடுவோர்க்குச் சிறப்புத் தருவதாகும்.

◆ பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியஞ்சல் எஞ்ஞான்றும் இல். 4

❒ பழி பாவங்களுக்கு அஞ்சிச் சேர்த்த பொருளைக் கொண்டு பகுத்துண்டு வாழ்வானேயானால், அவனது சந்ததியின் வாழ்வின் மேன்மை எக்காலத்தும் குறைவுபடாது.

◆ அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 5

❒ தன் துணைவியிடம் அன்பினைச் செலுத்தி, பிறர்க்கு ஈந்து அறத்தன்மையுடன் வாழ்வானேயானால், அவையே அவனது வாழ்க்கையின் பண்பும், பயனுமாகும்.



◆ அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஓய்ப் பெறுவ தெவன்?

❒ ஒருவன் தனது இல்வாழ்க்கையை அறவழியிலேயே செலுத்துவானாகில், அவன் வேறு நெறியில் சென்று பெறத் தக்கது எதுவுமே இல்லை.

◆ இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

❒ அறத்தின் நெறிப்படி இல்வாழ்க்கை நடத்துபவன், தவம் செய்யும் முனிவர்களை விடச் சிறந்தவனாகப் போற்றப்படுவான்.

◆ ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. 8

❒ தானும் அறவழியில் நடந்து, மற்றவர்களையும் அறநெறியில் செலுத்தி வாழ்பவனின் இல்லற வாழ்க்கை, தவநெறியில் செல்வோரை விட மிகவும் மேன்மையானதாகும்.

◆ அறனெனப் பட்டதே இல்வாழ்கக்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று. 9

❒ அறம் என்று சிறப்பித்துக் கூறப்படுவது இல்லறமேயாகும். அதுவும், பிறர் பழிக்க முடியாதபடி நடக்குமானால் அது மேலும் நன்மை தரக் கூடியதாகும்.

◆ வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். 10

❒ வாழ்வதற்குரிய அறநெறிப்படி இல்லறம் நடத்துபவன், வானுலகத் தேவர்களுள் ஒருவனாக மதிக்கப்படுவான்.

RangaRakes

Tamilnavarasam.com

## அன்புடைமை

- அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 1

❒ அன்பிற்கு அடைத்து வைக்கும் தாழ்ப்பாள் இல்லை; அன்புடையவரின் புல்லிய கண்ணீரே மனத்திலிருக்கும் அன்பை வெளிப்படுத்தி விடும்.

- அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 2

❒ உள்ளத்தில் அன்பில்லாமல் இருப்போர், எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிய தென்பர். அன்பு உடையவர், தனது உடம்பையும் பிறருக்கு உரியதாக்கி வாழ்வர்.

- அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. 3

❒ அருமையான இந்த உயிருக்கு உடம்புடன் பொருந்தி இருக்கின்ற உறவே, அன்புடன் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்பர்.

- அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 4

❒ அன்பு, பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அது, எல்லாரிடத்தும் சிறந்த நட்பை உண்டாக்கும்.

- அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு. 5

❒ உலகில் அன்பு உடையவராய் இல்லறத்துடன் பொருந்திய நெறியின் பயனே, பின்னர் வீடு பேறு அடையச் செய்திடும் என ஆன்றோர் கூறுவர்.

- அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 6

❒ அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று அறியாதார் கூறுவர். மற்றப் பாபச்செயல்களை நீக்குவதற்கும் அந்த அன்பே துணையாகும்.





- என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 7

❒ எலும்பு இல்லாத புழுவை வெயில் காய்ந்து வருத்துவதுபோல, அன்பு இல்லாத உயிரை அறமானது அழிக்கும்.

- அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. 8

❒ மனத்தில் அன்பிலார் வாழும் உயிர் வாழ்க்கையானது, வறண்ட பாலை நிலத்தில் பட்ட மரம் தளிர்த்தது போலாகும்.

- புறத்துறுப் பெல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு. 9

❒ உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு மற்ற புற உறுப்புக்களால் யாது பயன்?

- அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. 10

❒ அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிருள்ளதாகும். அன்பு இல்லாதவர் உடம்பு, எலும்பைத் தோலால் போர்த்த உயிரற்ற உடம்பாகும்.

## வாழ்க்கைத் துணைநலம்

- மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 1

❒ இல்லற வாழ்விற்கேற்ற நற்பண்புகள் உடையவளாகித் தன் கணவனின் வருவாய்க்குத் தகுந்தபடி வாழ்க்கை நடத்துகின்றவளே சிறந்த வாழ்க்கைத் துணையாவாள்.

- மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். 2

❒ இல்லறத்திற்குரிய நற்பண்புகள் மனைவியிடம் இல்லையானால், அந்த இல்வாழ்க்கை செல்வத்தால் எவ்வளவு சிறந்திருந்தாலும் பயன் தராது.

◆ இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. 3

❒ மனைவி நற்பண்புகள் நிறைந்தவளாக இருந்தால் ஒருவனது வாழ்க்கையில் இல்லாதது எதுவுமே இல்லை. அவள் அத்தகைய நற் குணமுடையவளாக இல்லையெனில் அவனது வாழ்க்கையில் ஒன்றுமே இல்லை.

◆ பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். 4

❒ இல்லறத்தின் கற்பு நெறியைக் கடைப்பிடிக்கும் பெண்ணைவிடப் பெருமை தரக் தக்கது எதுவுமே இல்லை.

◆ தெய்வந் தொழஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பழை.

❒ வேறு தெய்வத்தை வணங்காமல், தன் கணவனையே தெய்வமாகக் கருதித் தொழுது துயில் எழுகின்றவள் பெய் என்று சொன்னால் மழை பெய்யும்.

◆ தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 6

❒ தன்னுடைய கற்பு நெறியையும் காப்பாற்றிக் கொண்டு, தனது கணவனையும் பேணிப் பாதுகாத்து, தகுதி மிக்க புகழையும் காத்து, மனம் தளராமல் வாழ்கின்றவளே பெண் எனப்படுவாள்.

◆ சிறைக்காக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. 7

❒ பெண்களை வீட்டில் அடைத்து வைத்துக் காவல் காப்பதால் ஒரு பயனும் இல்லை. அவர்கள் கற்பினால் தங்களைத் தாங்களே காப்பதே சிறப்புடையதாகும்.

◆ பெற்றாற் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புததேளிர் வாழும் உலகு. 8

❒ தன் கணவனைப் போற்றிக் கடமையைச் செய்யும் பெண்கள், மிகப் பெரும் சிறப்பையுடைய வீடுபேற்றினை அடைவர்.



புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறு போல் பீடு நடை. 9

❒ நல்ல புகழைத் தரும் மனைவியை அடையாதவர், தன்னை இகழ் வோர் முன் ஆண் சிங்கம் போல் பெருமிதமாக நடக்க இயலாது.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. 10

❒ மனைவியின் நல்ல பண்பே இல்லற வாழ்க்கைக்கு மங்கலம் என்பர். நல்ல மக்களைப் பெறுவதே அதற்கு நல்ல அணிகலம் என்பர்.

## மக்கட்பேறு

◆ பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. 1

❒ பெறவேண்டிய நற்பேறுகளுள், அறிய வேண்டியவற்றை நன்கறிந்த நன்மக்களைப் பெறுவதைவிட, வேறெதுவும் இல்லை.

◆ ஏழுபிறப்பும் தீயவை தீண்டா பழியிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 2

❒ பழிகளுக்குள்ளாகாத நல்ல பண்புகளையுடைய மக்களைப் பெறுவாராயின், அவரை ஏழு பிறப்பிலும் துன்பம் வந்து தொடராது.

◆ தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தத்தம் வினையான் வரும். 3

❒ தமது மக்களே ஒருவர் தாம் தேடிய பொருள் என்று கூறுவர். அவ்வாறு மக்கட் செல்வம் அமைவது அவரவர் செய்த வினையின் பயனாலேயே வந்து சேரும்.

RangaRakes
Tamilnavarasam.com

◆ அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ். 4

❐ தம்முடைய மக்களின் சிறு கரங்களால் அளாவப்பெற்ற உணவு, அமிழ்தத்தைவிட இனிமை தருவதாகும்.

◆ மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. 5

❐ தம் மக்களின் உடலைத் தொடுதல் உடலுக்கு இன்பம் தருவதாகும். அவர்களின் மழலைச் சொற்களைக் கேட்பது செவிகளுக்கு இன்பம் தருவதாகும்.

◆ குழலினிது யாழினிது என்பதன் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். 6

❐ குழலின் ஓசையையும், யாழின் ஓசையையும் இனிமையானது என்று கூறுபவர்கள், தமது மக்களின் மழலைச் சொல்லைக் கேளாதவராவர்.

◆ தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். 7

❐ ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யும் நன்மை யாதெனில், தன் மகனை முன்னிலையில் இருக்கும்படி செய்வதாகும்.

◆ தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 8

❐ தமது மக்களின் அறிவுடைமை தமக்கு இன்பம் தருவதைவிட உலக உயிர்களுக் கெல்லாம் இன்பம் பயப்பதாகும்.

◆ ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 9

❐ தன் மகனைப் பெற்ற நாளில் தாய் மகிழ்ச்சி அடைகிறாள். அம்மகனைச் சிறந்தவன் என்று பிறர் கூறுவதைக் கேட்ட தாய், அவனை பெற்ற காலத்தில் அடைந்ததைவிட அதிக மகிழ்ச்சி அடைவாள்.

RangaRakes



◆ மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்லெனுஞ் சொல்.

❐ மகன் தன் தந்தைக்குச் செய்யும் கைம்மாறு என்னவென்றால் 'இத்தகைய மகனைப் பெற இவன் என்ன தவம் செய்தானோ' எனப்போற்றும்படி நடந்துகொள்ள வேண்டும்.

## விருந்தோம்பல்

◆ இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

❐ இல்லத்தில் இருந்து கொண்டு பொருள் சேர்த்து வாழ்வது, விருந்தினரைப் போற்றி உபசரிப்பதற்காகவே ஆகும்.

◆ விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 2

❐ தன்னை நாடி வந்த விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்துவிட்டு, அமிழ்தமே எனினும் தான் மட்டும் உண்பது விரும்பத் தகாததாகும்.

◆ வருவிருந்து வைகலும் ஒப்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. 3

❐ தன்னை நாடி வரும் விருந்தினரைத் தினமும் வரவேற்று உபசரிக்கின்றவனின் வாழ்க்கையில் வறுமை வருவதே இல்லை.

◆ அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். 4

❐ இனிய முகத்துடன் விருந்தினர்களை உபசரிப்பவன் இல்லத்தில் திருமகள் மனம் மகிழ்ந்து தங்குவாள்.

Tamilnavarasam.com

◆ வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். 5

❐ வரும் விருந்தினரை உபசரித்து உண்ணச் செய்த பின் மீதமுள்ள உணவை உண்ணும் தன்மை கொண்டவன் நிலத்தில் விதைக்க வேண்டிய அவசியமே இல்லை.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு 6

❐ வந்த விருந்தினரை உபசரித்து அனுப்பிவிட்டு, இனி வரும் விருந்தினரை எதிர்பார்த்து இருப்பவன் தேவர்களுக்கு நல்விருந்தினனாவான்.

◆ இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 7

❐ விருந்தோம்பலின் பயன், இந்த அளவுதான் என்று கூற இயலாது. விருந்தினரின் தகுதிக்கேற்ற அளவினதாகும்.

◆ பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 8

❐ விருந்தினரை அன்புடன் உபசரித்து நோன்பின் பயனை அடையாதவர், பொருளை மட்டுமே காத்துப் பின் வறியவராய்த் தமக்கு உதவத் துணையற்று வருந்துவர்.

◆ உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. 9

❐ செல்வம் உள்ள நிலையிலும் வறுமை என்பது விருந்தோம்பலைப் போற்றாத அறியாமையாகும். அது அறிவிலிகளிடம் உள்ளதாகும்.

◆ மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 10

❐ அனிச்ச மலர் முகர்ந்தவுடன் வாடிவிடும். அது போல் முகம் மலராமல் வேறுபட்டு நோக்கியதுமே விருந்தினரின் முகம் வாடிவிடும்.



## சுற்றந்தழால்

◆ பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. 1

❐ ஒருவன் வறுமையடைந்தபோதும், அவனது பழம் பெருமையைப் பாராட்டுதல் சுற்றத்தாரிடமே உள்ள குணமாகும்.

◆ விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
வாக்கம் பலவுந் தரும். 2

❐ அன்பு குறையாத நல்ல உறவினர்கள் ஒருவனுக்குக் கிடைத்தால், அவனுக்கு மேன்மேலும் வளம் குறையாத செல்வம் பலவற்றையும் தரும்.

◆ அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர் நிறைந் தற்று. 3

❐ சுற்றத்தாருடன் மனங்கலந்து பழகாதவன் வாழ்க்கை, கரையில்லாத குளம் நீர் நிரம்பியது போன்றதாகும்.

◆ சுற்றதாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். 4

❐ ஒருவன் செல்வம் பெற்றதன் பயன் தனது சுற்றத்தார் தன்னைச் சூழ அவர்களைத் தழுவி நடத்தலே ஆகும்.

◆ கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும். 5

❐ பொருளைக் கொடுத்து சுற்றத்தாரிடம் இனிமையாக நடப்பானாகில், தொடர்ந்து பல சுற்றத்தாரால் சூழப்படுவான்.

◆ பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மநிலத்து இல். 6

❐ சிறந்த ஈகை உடையவனாகவும், கோப மற்றவனாகவும் ஒருவன் இருந்தால், அவனைப் போன்று உறவினரை உடையவர் உலகினில் எவரும் இல்லை.

RangaRakes
Tamilnavarasam.com

◆ காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் 7
அன்னநீ ரார்க்கே உள.

❐ தனக்குக் கிடைத்த உணவை மறைத்து வைக்காமல் காகம் தனது இனத்தாரை அழைத்து, கூடி உண்ணும். அத்தகைய பண்புடையார்க்கே ஏற்றமும் உண்டாகும்.

◆ பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின் 8
அது நோக்கி வாழ்வார் பலர்.

❐ அரசன் எல்லாவற்றையும் ஒரே வகையாகப் பாராமல், அவரவர் தகுதிக்கேற்றபடி நோக்கினால், அவனை விரும்பிச் சுற்றமாக வாழ்வோர் பலராவர்.

◆ தமராகித் தன்றுறந்தார் சுற்றம் அமராமைக் 9
காரணம் இன்றிவரும்.

❐ முன்னர் சுற்றமாக இருந்து, பின்னர் ஒரு காரணத்தினால் பிரிந்தவரின் உறவு, அவ்வாறு அவர் பொருந்தாமலிருந்த காரணம் நீங்கிய பின், தானே வந்து சேரும்.

◆ உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன் 10
இழைத்திரிந்து எண்ணிக் கொளல்.

❐ முன்னர், தன்னிடமிருந்து பிரிந்து சென்ற காரணத்திற்காக, மீண்டும் நாடி வந்தவனை அரசன், அவன் வேண்டிய உதவியைச் செய்து ஆராய்ந்து உறவு கொள்ள வேண்டும்.

## குடிமை

◆ இற்பிறந்தார் கண் அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

❐ நல்ல குடியில் பிறந்தவர்களைத் தவிர மற்றவர்களிடம் நன்னடத்தையும், நாணமும் ஒருசேர இயல்பாக அமைவதில்லை.



◆ ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும் 2
இழுக்கார் குடிப்பிறந் தார்.

❐ நன்னடத்தை, வாய்மை, நாணம் ஆகிய மூன்றையும் நல்ல குடியில் பிறந்தவர்கள் தவறவிட மாட்டார்கள்.

◆ நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும் 3
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

❐ உண்மையுள்ள உயர்ந்த குடியில் பிறந்தவர்க்கு, முகமலர்ச்சி, ஈகை இன்சொல் பிறரை இகழ்ந்து பேசாமை ஆகிய நான்கு நல்ல பண்புகளும் இயல்பாக அமைந்திருக்கும்.

◆ அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார் 4
குன்றுவ செய்தல் இலர்.

❐ கோடி கோடியாகப் பொருள் கிடைப்பதாக இருந்தாலும், உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் தங்கள் குடியின் பெருமை குலைய நடக்க மாட்டார்கள்.

◆ வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி 5
பண்பில் தலைப்பிரிதல் இன்று.

❐ காலங்காலமாகத் தானம் செய்து வரும் குடும்பத்தில் தோன்றியவர், தான் வறுமையுற்ற காலத்திலும், தமது பண்பிலிருந்து மாறுபட மாட்டார்.

◆ சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற 6
குலம் பற்றி வாழ்தும் என் பார்.

❐ மாசற்ற நல்ல குடிப்பண்புடன் வாழ்கிறவர் வஞ்சக எண்ணங்களுடன் தகுதி இல்லாத செயல்களைச் செய்யார்.

◆ குடிப்பிறந்தார் கண்விளக்கும் குற்றம் விசும்பின் 7
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து

❐ உயர்குயிடில் பிறந்தோரிடம் தோன்றும் குற்றம் வானிலுள்ள நிலவில் தோன்றும் களங்கம்போல் தெளிவாகத் தோன்றும்.

◆ நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் 8
குலத்தின்கண் ஐயப் படும்.

❐ ஒருவனுடைய நல்ல பண்புகளுக்கிடையில், அன்பற்ற தன்மை காணப்பட்டால், அவனுடைய குடிப்பிறப்பில் சந்தேகம் எழும்.

RangaRakes
Tamilnavarasam.com

- நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல். 9

❒ நிலத்தின் இயல்பினை அந்நிலத்தில் தோன்றும் முளை காட்டும். அதுபோல ஒருவனின் வாய்ச்சொல் அவனது குடிப் பிறப்பைக் காட்டி விடும்.

- நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம் வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 10

❒ ஒருவனுக்கு நன்மை ஏற்பட வேண்டுமானால் நாணம் உடையவனாக இருக்க வேண்டும். பிறந்த குடிக்குப் பெருமை ஏற்பட வேண்டு மானால் யாவரிடத்தும் பணிவு வேண்டும்.

## குடி செயல் வகை

- கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல். 1

❒ தான் பிறந்த குடிக்கு மேன்மை ஓங்கச் செய்வதற்கு சோர்வு கொள்ளாமல் முயற்சி செய்வதைப் போல் சிறப்பானது வேறொன்றும் இல்லை.

- ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி 2

❒ விடாமுயற்சியையும், சிறந்த ஆற்றலையும் இடைவிடாமல் பின்பற்று கின்றவனின் குடி உயர்ந்து விளங்கும்.

- குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 3

❒ எனது குடியை உயர்வடையச் செய்வேன் என்று முயற்சி செய்ப வனுக்குத் துணை செய்ய, தெய்வமே தனது ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு தானே முன்வந்து துணை செய்யும்.



- சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. 4

❒ தமது குடியின் பெருமையை உயர்த்துவதற்குரிய செயலில் ஈடுபடு பவர்க்கு அவர் செய்யாமலேயே அப்பணி நிறைவடையும்.

- குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 5

❒ குற்றமற்றவனாய் தனது குடியின் பெருமையை உயர்த்தும் செய லில் ஈடுபடுபவனை உலகினர் தம் உறவாய்ச் சூழ்ந்து கொள்வர்.

- நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 6

❒ ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று கூறத்தக்கது யாதெனில், தான் பிறந்த குடியை ஆளும் திறனை, தமக்குத் தாமே உருவாக்கிக் கொள்வதாகும்.

- அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 7

❒ போர்க்களத்தில் பலருக்கிடையில் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் அஞ்சாத வீரரைப் போல் குடும்பச் சுமையைத் தாங்குபவரிடமே பொறுப்பு உள்ளது.

- குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும். 8

❒ தனது குடி உயரப் பாடுபடுபவர்க்கு, அதற்குரிய காலம் என்று ஒன்றில்லை. சோம்பல் கொண்டு தன் மானத்தைப் பெரிதாகக் கருதினால், குடிப்பெருமை தாழ்வடையும்.

- இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. 9

❒ தனது குடிக்கு வரக்கூடிய தீமைகளை வராமல் தடுக்க முயலுகின்ற ஒருவனுடைய உடம்பு துன்பத்திற்கே இருப்பிடமானதோ?

- இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லாள் இல்லாத குடி. 10

❒ வருகின்ற துன்பத்தைத் தாங்கக் கூடிய நல்ல ஆண்மகன் இல்லாத குடி, துன்பமாகிய கோடரி வெட்டி வீழ்த்த, வீழ்ந்து விடும்.

RangaRakes Tamilnavarasam.com

## காதல் சிறப்புரைத்தல்

◆ பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர். 1

❐ மென்மையான இனிய மொழிகளைப் பேசுகின்ற இவளது தூய பற்களில் ஊறிய நீர், பாலுடன் தேனைக் கலந்தது போன்ற இனிமை உடையதாகும்.

◆ உடம்பொடு உயிரிடை என்னமற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. 2

❐ உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு எத்தகையதோ, அப்படிப்பட்டதே எனக்கும் இம்மடந்தைக்கும் உள்ள நட்பு.

◆ கருமணியிற் பாவய்நீ போதாய் யாம்வீழும்
திருநுதற்கு இல்லை இடம். 3

❐ எம் கண்ணிலுள்ள கருமணிப் பாவையே! நீ போய்விடு; நான் விரும்பும் அழகிய நெற்றியையுடையவள் இருப்பதற்கு அதைத் தவிர வேறெந்த இடமுமில்லை.

◆ வாழ்தல் உயிர்கன்னள் ஆயிழை சாதல்
அதற்தன்னன் நீங்கும் இடத்து. 4

❐ அணிகலன்களை அணிந்த இவள் கூடும்போது உயிர்க்கு வாழ்வு போன்றவள். பிரிகின்ற போது உயிர் உடலைவிட்டு நீங்குவது போலுள்ளது.

◆ உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். 5

❐ போர் செய்யும் தன்மையுடைய கண்களைப் பெற்ற இவளுடைய பண்புகளை மறந்தால் பின்னர் நினைப்பேன். ஆனால் நான் ஒரு போதும் மறப்பதும் இல்லை. அதனால் நினைப்பதும் இல்லை.

◆ கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர் எங்காத லவர். 6

❐ எம் காதலர் எம் கண்ணுள்ளிருந்து போக மாட்டார். இமைத்தாலும் வருந்தார் அவ்வளவு நுட்பமானவர்.



◆ கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து. 7

❐ எம் காதலர் எம் கண்ணுள் இருப்பதால் கண்ணுக்கு மையெழுதும் பொழுது அவர் மறைவார் என்பதால் கண்ணுக்கு மையும் எழுதேன்.

◆ நெஞ்சத்தால் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து. 8

❐ எம் காதலர் எமது நெஞ்சிலேயே இருக்கிறார். சூடான பொருளை உட்கொண்டால் அவரைச் சுடும் என்பதால் அதனை உண்ண அஞ்சுகின்றோம்.

◆ இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
எதிலர் என்னுமிவ்வூர். 9

❐ கண்ணை இமைத்திடின் காதலர் மறைவார் என்பதால் இமையாமல் இருக்கிறேன். அதனை அறிந்திடாமல், 'இவளைத் துயிலாநோய் செய்தார்' என ஊரார் அவரைப்பழிக்கின்றனர்.

◆ உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னுமிவ்வூர்.

❐ எம்காதலர் எம் இதயத்தில் எப்போதும் மகிழ்வுடன் வாழ்கிறார். அதனை அறியாத இவ்வூரார் 'அன்பில்லாமல் பிரிந்து வாழ்கின்றார்' என்று பழித்துக் கூறுவர்.

## நலம் புனைந்துரைத்தல்

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

❐ அனிச்ச மலரே! நல்ல மென்மைத் தன்மையைப் பெற்றிருக்கிறாய். நீ வாழ்க! எம் காதலியோ உன்னைவிட மென்மையானவள்.

RangaRakes Tamilnavarasam.com

◆ மலர் காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூஒக்கும் என்று. 2

❒ நெஞ்சமே! இவளுடைய கண்கள் பலரும் பார்க்கின்ற மலர்களைப் போல இருக்கிறது என்று மலர்களைப் பார்த்தால் நீ மயங்குகிறாய்.

◆ முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. 3

❒ மூங்கில் போன்ற தோள்களை உடைய இவளுக்கு மேனியே தளிர்; பல்லே முத்து; இயற்கை மணமே நறுமணம்; மையிட்ட கண்களே வேல் போன்று உள்ளன.

◆ காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வே மென்று. 4

❒ அழகில் சிறந்த இவளைக் குவளை மலர்கள் கண்டால், 'இவளுடைய கண்களுக்கு ஈடாக நாம் இல்லையே!' என்று தலை குனிந்து நிலத்தைப் பார்க்கும்.

◆ அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. 5

❒ அவள் தனது மென்மையை உணராமல், காம்புகளைக் களையாமல் சூடினாள். அச்சுமையைத் தாங்க முடியாது இடை வருந்தும் படி நெய் தற்பறை ஓசை ஒலிக்கும்.

◆ மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். 6

❒ நிலவிற்கும் இவள் முகத்திற்கும் வேறுபாடு காண முடியாமல் தமது நிலையில் நிற்காமல் கலங்கித் திரிகின்றன.

◆ அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. 7

❒ உருவற்றுப்பின் படிப்படியாக வளர்ந்து முழுமையாகும் நிலவைப் போல இந்த மாதர் முகத்தில் களங்கம் உண்டோ? இல்லையே!

◆ மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. 8

❒ திங்களே! மாதர் முகத்தைப் போல ஒளி வீசுவாயானால், நீயும் காதல் உரிமை பெற்று வாழ்க.



◆ மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி. 9

❒ திங்களே! மலர் போன்ற விழிகளையுடைய இவளது முகத்தைப் போன்றிருக்க நீ விரும்பினால் பலரும் காணும்படியாகத் தோன்றாதே!

◆ அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 10

❒ அனிச்ச மலரும், அன்னப் பறவையின் இறகும் கூட, மாதரின் மெல்லிய பாதங்களுக்கு நெருஞ்சி முள் போல வருத்தம் தரும்.

## பிறனில் விழையாமை

◆ பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல். 1

❒ உலகினில் அறம் பொருளென்ற நெறிகளை ஆராய்ந்து தெளிந்த வரிடம்., பிறன் மனைவியை விரும்பும் அறியாமை இல்லை.

◆ அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல். 2

❒ அறத்தை விட்டு விலகி தீய வழியில் நிற்பவர்களுள் மாற்றான் மனைவியை விரும்பி அவனது வாயிலுக்குச் சென்று நின்றவரைப் போல் அறிவிலிகள் எவருமில்லை.

◆ விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார். 3

❒ தம்மைப் பற்றி ஐயப்படாமல் நம்புகிறவரின் மனையில், பாவம் செய்திட விரும்புவர் உயிருடையவரென்றாலும் இறந்தவரை ஒப்பர்.

RangaRakes Tamilnavarasam.com

- எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல். 4

❒ காம மயக்கத்தில் தினையளவும் ஆராயாமல், பிறன் மனைவியை விரும்பி அந்த இல்லத்தில் புகுபவர், எத்தகைய பெருமைக்குரியவராக இருந்தாலும், அப்பெருமையை முற்றிலும் இழந்தவராவர்.

- எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 5

❒ இது எளிதான செயல் என்று கருதிப் பிறன் இல்லாளுடன் சேர்பவன், என்றும் தீராத பழியை அடைவான்.

- பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். 6

❒ பிறன் மனைவியைக் கூடுபவனைவிட்டு, பகை, பாவம், பயம், பழி ஆகிய நான்கு தீமைகளும் ஒருக்காலும் நீங்கா.

- அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். 7

❒ அறநெறியில் வழுவாது இல்லறம் நடத்துகின்றவன் மாற்றான் மனைவியின் பெண்மையை ஒதுபோதும் விரும்ப மாட்டான்.

- பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. 8

❒ பிறன் மனைவியை மனத்தும் நினைக்காத பெரும் ஆண்மை, அறிவிற் சிறந்த மேலோர்க்கு அறம் மட்டுமன்று; உயர்ந்த ஒழுக்கமும் ஆகும்.

- நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார். 9

❒ கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் நன்மைக்கு உரியவர் யாரெனில், பிறன் ஒருவனுக்கு உரிமையானவளின் தோளைச் சேராதவரேயாவார்.

- அறன் வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயலாமை நன்று. 10

❒ ஒருவன் அறநெறியில் நடக்கலாம், வேதாந்த அறமற்ற செயல்களைச் செய்வதாலும், மாற்றானுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்வது நல்லது.



## புகழ்

- ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. 1

❒ ஏழைமையில் வாடுவோருக்கு ஈகை செய்து, அதனால் ஏற்படும் புகழுடன் வாழ வேண்டும். அதற்கு நிகரான சிறப்பு, உயிர்க்கு வேறெதுவும் இல்லை.

- உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ். 2

❒ புகழ்ந்து சொல்கின்றவர்களெல்லாம், தன்னிடம் இல்லை என்று வந்தவர்க்கு வேண்டுவனவற்றை தந்து உதவுகின்றவரின் புகழையேயாகும்.

- ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்றில். 3

❒ ஒருவனுக்கு உயர்ந்த புகழைவிட உலகில் ஒப்பற்ற பொருளாக நிலைத்து நிற்பது எதுவும் இல்லை.

- நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு. 4

❒ பூமியில் இழியாது நிலைக்கக் கூடிய புகழைப் பெற்றால், அத்தகையவரையே வானுலகும் போற்றுமேயன்றி அறிவால் மட்டுமே சிறந்தவர்களைப் போற்றாது.

- நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது. 5

❒ நத்தை அழியும் ஆனால், முத்து சிறப்படையும். அதுபோல் இந்தப் பூதவுடல் அழிந்தாலும் புகழுடம்பு வாழும், அறிவில் சிறந்தோரைத் தவிர மற்றவர்க்கு இது இயலாது.

- தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 6

❒ மனிதனாய்ப் பிறப்பவர் புகழ்பெற்று வாழ வேண்டும். அப்படி இல்லாதவர் அவையிலிருந்து ஒதுங்கியிருப்பதே நல்லது.

RangaRakes Tamilnavarasam.com

◆ புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவர் எவன். 7

❒ தமக்கும் புகழ் வருமாறு வாழ முடியாதவர் தம்மைத்தாமே நொந்து கொள்வதைவிட்டு, தம்மை இகழ்பவர்களை நொந்து கொள்வது எதற்கோ?

◆ வசையென்ப வையத்தார்க்கு எல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின் 8


❒ மனிதராகப் பிறப்பவர்கள் புகழைப் பெறா விட்டால், அவருக்கு அது இவ்வுலகில் தீராப்பழியைத் தரும்.

◆ வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். 9

❒ புகழினைப் பெறாது, வாழ்வை வீணே கழித்தவரின் உடம்பைச் சுத்த நிலம், பழிக்கப்படாத விளைவு இல்லாமல் குன்றும்.

◆ வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 10

❒ பழிச்சொல் ஏற்காது வாழ்பவரே உலகில் உயிர் வாழ்கின்றவர் ஆவார். புகழ் பெறாமல் வாழ்பவர் இறந்தவருக்கொப்பாவார்.





# இல்லறம் இனிதே அமைய நல்வழிகள்

**(திருமுருக கிருபானந்தவாரியார்)**

குடும்பம், ஒரு தருவைப் போன்றது, அதற்கு வேர் மனைவி; அடிமரம் கணவன்; கிளைகள் மக்கள்; இலைகள் அன்பு; மலர்கள் கருணை; பழங்கள் தர்மம்.

பலப் பல பறவைகட்கும் மனிதர்கட்கும் நிழல் தந்து தரு உறைவிடமாக உதவுவது போல் இல்லறத்தான் எப்போதும். பிறருக்கு உதவியாக இருக்க வேண்டும். மனத்தாலும், வாக்காலும், உடம்பாலும் பிறர்க்கு நன்மைசெய்.

◆◆◆

இல்லறத்தானாக நீ இருப்பாயாகில் உன் மூலதனத்தைக் காப்பாற்றி அதன் மூலம் வருவாயை நல்ல வழியில் செலவிடு. அப்படிச் செய்வாயாயின் உன் மூலதனம் அழியாது. அதனால் நீ செய்யும் நல்லறம் தொடர்ந்து நடைபெறும்.

மாலை கட்டுபவன் செடிகளை வைத்துக் கொண்டு மலருந்தோறும் மலர்களை எடுத்துத் தொடுத்து விற்பது போல. செடி மூலதனம்; மலர் அதன் வருவாய்.

◆◆◆

உன் மனைவியைக் காப்பாற்றுவது மிக அவசியம். ஏனெனில் அவள் உன் வாழ்க்கைத் துணைவி. இம்மைக்கும் மறுமைக்கும் அவள் உனக்குத் துணையாக வருகின்றாள் என்பதை மறக்கக் கூடாது.

◆◆◆

RangaRakes

Tamilnavarasam.com

நீ இறைவனின் கருணையைப் பெறவேண்டுமானால் அதற்கு வழி ஒன்றுண்டு. அது வெறும் வணக்கமும் வழிபாடும் மட்டுமன்று.

துன்பமுற்றுத் துடிக்கின்ற உயிர்களிடம் நீ கருணை செய். அவற்றின் துன்பத்தை நீக்கு. நீ பிற உயிர்களிடம் கருணை செய்தால் கடவுள் உன்னிடம் கருணை செய்வான். கருணையால் கருணையைப் பெறலாம். இதை ஒரு போதும் மறவாதே.

◆◆◆

உன் செல்வம் அழியாமலிருக்க வேண்டுமானால் நீ மூன்று காரியங்களைச் செய்யாமலிருக்க வேண்டும்.

1. ஏழைகளின் கண்களிலிருந்து நீர்வர வொட்டாமல் நடந்து கொள்.
2. பிறரது பொருள் உனக்கு வரவேண்டுமென்று கனவிலுங் கருதாதே.
3. நியாயமல்லாத எந்த வழியிலும் பொருளைச் சேர்க்காதே.

◆◆◆

மூட்டைப் பூச்சியைப் போல பிறரை இம்சித்து வாழாதே.

எலியைப் போல. திருடி வயிற்றை வளர்க்காதே.

செல்லைப் போல பிறர் பொருளைக் கெடுத்து மகிழாதே.

தேனீயைப் போலவும், எறும்பைப் போலவும் உழைத்து உண் அதுவே உனக்கு அமைதியையும் அன்பையும் தரும்.

◆◆◆

அறிவு, குடிப்பிறப்பு, அடக்கம், அளவறிந்து பேசுதல், கல்வி, ஆற்றல், தன் சக்திக்கேற்ற தானம், நன்றியறிதல் ஆகிய எட்டு குணங்களும் மனிதனை ஓங்க வைக்கின்றன.

◆◆◆



மங்களமான செயல்களால் உண்டாவது செல்வம். உண்டான செல்வம் சாமர்த்தியத்தால் வளர்ச்சியடைகிறது. வளர்ந்த செல்வம் விரைந்த செய்கையால் (செயலூக்கத்தால்) வேரூன்றுகிறது. வேரூன்றிய செல்வம் அடக்கத்தால் நிலை பெறுகிறது.

◆◆◆

கங்கை நீர் சிறந்தது. அதனினும் சிறந்தது அபிஷேக நீர். ஏழைகட்காக உழைக்கும் ஓர் உத்தமனின் முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர் அதனினும் சிறந்தது.

◆◆◆

அடியார்களுக்குச் செய்தது இறைவனுக்குச் செய்ததாகும். வீதிகளில் தொங்கும் அஞ்சல் பெட்டியில் இட்ட கடிதங்கள் தலைமை அஞ்சலகத்திற்குப் போய்ச் சேரும். தலைமை அஞ்சலகத்தில் இட்ட கடிதங்கள் தெருவிலுள்ள அஞ்சற் பெட்டிக்கு வரமாட்டா.

பசுவின் வாயில் இரை தந்து மடியில் பால் கறக்கின்றோம் அடியார்கள் வாய்; இறைவன் மடி. அடியார்களுக்குச் செய்தால் இறைவனாகிய மடியில் திருவருளாகிய பால் சுரக்கும்.

◆◆◆

வாய் கொப்பளித்து வலப் பக்கம் ஒருபோதும் உமிழக் கூடாது. அது பிதிர்கட்குத் துன்பந் தரும்.

பெண்கள் பரிமாறும்போது அன்னம், நெய் உப்பு ஆகிய மூன்றையும் கையால் எடுத்துப்போடக் கூடாது. கரண்டியால்தான் இடவேண்டும்.

◆◆◆

கடும் வெயில், மயானப் புகை, தன்னை விட அதிக வயதுள்ளவளைப் புணர்தல், தேங்கிய குட்டை நீர், இரவில் தயிரன்னம் ஆகிய ஐந்தும் ஆயுளைக் குறைக்கும்.

◆◆◆

RangaRakes Tamilnavarasam.com

மாலை வெயில், ஓமப் புகை, இளம் மனைவி, அருவி நீர் இரவில் பாலன்னம் ஆகிய ஐந்தும் ஆயுளை வளர்க்கும்.

◆◆◆

நீராடிய பின் உடையை நீருள் பிழியக்கூடாது; ஒற்றையாடையுடன் உணவு செய்யக் கூடாது. இருகைகளாலும் தண்ணீர் குடிக்கக் கூடாது.

கால்களைக் கழுவிய ஈரம் உலர முன்னர் உணவருந்த வேண்டும். ஆனால் படுத்துறங்கப் போகும்பொழுது ஈரமான கால்களுடன் படுக்கக் கூடாது.

உணவுண்ணும்போது கிழக்கு நோக்கி அமர்ந்து உண்பார்கள் ஆயுள் வளரும். மேற்கு நோக்கி அமர்ந்து உண்பார்க்குப் பொருள் சேரும். தெற்கு நோக்கி அமர்ந்து உண்பார்க்குப் புகழ் வளரும். வடக்கு நோக்கி அமர்ந்து உண்பார்க்கு நோய் வளரும். வடக்கே தலை வைத்துப்படுக்கவும் கூடாது. வடக்கே நோக்கி வழிபாடு மட்டும் செய்யலாம்.

◆◆◆

இரவில் கிழக்கே தலை வைத்துப் படுத்துறங்குதல் நல்லது. ஆண்கள் இடப் பக்கம் கீழிருக்கவும், பெண்கள் வலப் பக்கம் கீழிருக்கவும் படுத்துறங்க வேண்டும்.

◆◆◆

ஆலயங்களில் இறைவனுக்கு முன் நின்று தன்னைத்தானே ஒரு போதும் சுற்றக் கூடாது.

◆◆◆

இரவில் இஞ்சி, பாகற்காய், கஞ்சி, கீரை கட்டித் தயிர், இலைக்கறி, நெல்லிக்காய் ஆகியவற்றை உண்ணலாகாது. உண்டால் இலட்சுமி கடாட்சம் நீங்கும்.

◆◆◆





# மனு தர்ம சாத்திரம் கூறும் இல்லற நெறிகள்

பெண்கள் தங்களைத் தாங்களே காக்க வேண்டும். அதுவே அவர்களுக்குக் காப்பாகும்.

கள் குடித்தல்,

துஷ்டர் கூட்டுறவு,

கணவனை விட்டு அயலூருக்குப் போதல்,

கணவனை விட்டுத் தீர்த்த யாத்திரை முதலான செய்தல்,

தான் விரும்பிய இடத்தில் தூங்குதல்,

அயலகத்து அமர்தல்,

- ஆகிய அறுவகைச் செய்கையும் மாதர்க்கு நிந்தையான செய்கையாகும்.

◆◆◆

உத்தம மாதருக்கும் செல்வத்திற்கும் வேறு பாடில்லை.

பெண்கள் எந்தக் குலத்திலே துன்பப்படுகிறார்களோ அந்தக் குலம் நசிக்கும். எந்தக் குலத்தில் மகிழ்ச்சியை அடைகிறார்களோ அந்தக்குலம் மேன்மையடையும்.

பலகணியிற் பார்த்தல்,

மிகுநகை செய்தல்,

பானம் பண்ணுதல்,

பகலில் உறங்குதல்,

RangaRakes Tamilnavarasam.com

மனைவியும் கணவனும் ஒருமைப்பட்டு மகிழ்ந்திருந்தா[illegible]ம் முழுதும் மகிழ்ச்சியடையும்.

வீட்டுப் பாத்திரம் முதலானவற்றை விளக்கம் செய்தலும்,

கணவன் கொடுத்த பொருளை வீணாகச் செலவழியாமையும், மங்கலச் செய்கையும்,

மந்திரம் முதலியவற்றால் கணவனை வசப்படுத்தாமையும்,

நன் மனையாள் செய்கையாம்.

◆◆◆

வைகறைத் துயில் எழுதல்,

வீடு விளக்கம் செய்தல்,

தயிர், மலர், தளிர் முதலிய பூசைத் திரவியங்கள் அமைத்தல்,

மாமன் மாமியாரை வந்தித்தல்,

பதிக்குப் பணிவிடை செய்தல்,

- இவை மங்கல வாழ்க்கையையும் செல்வத்தையும் விரும்பி நன்மனைவியின் செய்கையாம்.

◆◆◆

தகாத மொழி உரைத்தல்,

தலைக் கடையில் நிற்றல்,

காரியம் செய்யாமை.

ஆக்கினையன்றி வெளிப்போதல்,

அயலாரோடு பேசுதல்,



கணைக்காலும் தனமும் தெரிய ஆடையுடுத்தல்,

தலைமுடியின் நுனியில் முடிச்சிடாது விரித்துப்பரப்பித் தொங்கவிடுதல்,

குரு, கணவன், புதல்வன் இவர்கள் அல்லாதவர்களாகிய அயலார் அகத்தில் உண்ணுதல்,

கூட்டத்தில் புன்னகை செய்தல்

வேசை, தூர்த்தை, கற்புநிலை கெட்டவள், மாயக்காரி ஆகியோருடன் கூடுதல்,

- இவையெல்லாம் ஒழுக்கம் கெடுவதற்கு ஏதுவாகும்.

◆◆◆

## திருமணம் பற்றி காந்தியடிகள்

இந்து மதத்தின்படி கணவன் மனைவி இருவரும் ஒரே அந்தஸ்து உடையவர்கள். ஏற்றத் தாழ்வே கிடையாது.

கணவனுக்கு எடுத்துக்காட்டாக ராமனையும், மனைவிக்கு எடுத்துக்காட்டாக சீதையையும் நான் கொண்டிருக்கிறேன். சீதை ராமனுக்கு அடிமையாகவோ, ராமன் சீதைக்கு அடிமையாகவோ இருந்து வாழ்க்கை நடத்தவில்லை. ராமன் எப்போதும் சீதையை மதித்தே நடந்து வந்தான்.

நமது இலக்கியங்களில் மனைவியை "வாழ்க்கைத் துணைவி", "சகதர்மினி" என்றே அழைக்கிறார்கள். மனைவியைக் கூப்பிடும்போது கணவன் "தேவி" அதாவது பெண் தெய்வம் என்று சொல்லியே அழைக்கிறான்.

மணம் வேலிபோல இருந்து மதத்தைப் பாதுகாக்கிறது. வேலியை அவிழ்த்துவிட்டால், அது சிதைந்து சின்னா பின்னப்பட்டுவிடும். மதத்தின் ஆணிவேர் கட்டுப்பாடு; மணம் என்பது கட்டுப்பாடேயன்றி வேறல்ல.

RangaRakes

Tamilnavarasam.com

பெண் ஆணுக்குத்தோழி; ஆணைப்போலவே அறிவுத் திறன் உடையவள். ஆணினுடைய ஈடுபாடுகளில், சிறுசிறு அம்சங்களில்கூட கலந்து கொள்ளவும் அவற்றில் பங்கு பெறவும் பெண்ணுக்கு உரிமை உண்டு. அவனைப் போலவே அவளுக்கும் சுதந்திரமும், உரிமையும் உண்டு. உண்மைக் காதல் இல்லாத இடத்தில் இதய ஒற்றுமை ஏற்பட மாட்டாது.

கணவன் செய்கிற தவறுக்கு மனைவி உடந்தையாய் இருக்கவேண்டும் என்பதில்லை. கணவன் செய்வது தவறு என்று கருதினால், மனைவி சரி என்று தோன்றுவதைச் செய்யத் துணிவு வேண்டும். பொருள்தேடி, குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எப்படிக் கணவனுடையதோ, அப்படியே குடும்பத்தை நிர்வகிப்பதும் அதற்காகச் சமைப்பதும் மனைவியினுடைய பொறுப்பாகும்.

வாழ்க்கை என்பது ஒரு கடமை; உயர்ந்த லட்சியத்திற்காக அமைந்த ஒரு சாதனம். இகத்திலும் பரத்திலும் கணவன் மனைவி இருவருக்கும் நன்மை பயப்பதற்காகவே, மணவாழ்க்கை ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமன்றி, மனித சமுதாயத்துக்குத் தொண்டு செய்யும் பொருட்டும் மணவாழ்க்கை ஏற்பட்டது எனலாம்.

பெண் என்றால் தியாகத்தின் வடிவம் என்று கருதுகிறவன் நான். ஆயினும், ஆண்களுக்கு இல்லாத அபார சக்தி தங்களிடம் உண்டு என்பதை, துரதிர்ஷ்டவசமாகப் பெண்கள் மறந்தே போனார்கள்.

◆◆◆





# அமுத மொழிகள்

சிந்தனைச் சுங்கத்தில் காணும் கருத்துக்கள் அனைத்தும் முன்னேறத் துடிக்கும் உள்ளங்களுக்கு ஊன்றுகோலாகப் பயன்படும்.

பெரியவர்களாய்ப் பிறப்பவர் சிலர். பெருமையைத் தேடிக் கொள்ளுபவர் சிலர். சிலரிடம் பெருமை பிறரால் திணிக்கப்படுகிறது.

- ஷேக்ஸ்பியர்

உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக் கூடாது.

- விவேகானந்தர்

இன்று மட்டுமல்ல, எம் வாழ்நாள் முழுவதும் நிலைக்கும் சகோதரத்துத்தை - சொற்களால் அல்ல, செயல்களாலும் வினைகளாலும் எழுப்பப்பட்ட சகோதரத்துவத்தை எமக்கருள்.

உற்சாகமாய் இருங்கள்; உலகத்தில் ஏற்கனவே இருக்கும் உம்மணா மூஞ்சிகள் போதும்.

செயல்சிறிதோ, பெரிதோ, தம்மால் செய்யக்கூடியவற்றைச் சலிப்பின்றிச் செய்பவரே போற்றுதற்குரியவர்.

வாழ்நாள் முழுவதும் உழைத்தால் தான் ஒரு துறையில் தனிச்சிறப்பு நிலையை அடையமுடியும். அதற்குக் குறைந்த விலையில் அந்த நிலையை வாங்க முடியாது.

உழைப்பின்றி வெற்றி எதுவும் தழைப்பதில்லை. முறையான சிந்தனையால் வெற்றி கிடைக்கிறது. கண்ணுறங்காக் கவனத்தினால் அது காப்பாற்றப் பெறுகிறது.

- ஜேம்ஸ் ஆலன்

செயலை விதையுங்கள்,
பழக்கம் உருவாகும்.
பழக்கத்தை விதையுங்கள்,
உங்கள் எதிர்காலம் உருவாகும்.

அடக்கமே அறிவுடைமையின் சிறந்த அடையாளம்.

RangaRakes
Tamilnavarasam.com

மகிழ்ச்சி பொங்குகிற முகத்தைக் கொண்ட ஒருவர் வீட்டினுள் நுழைந்தால், உடனே அந்த வீட்டில் புதியதாக ஒரு ஒளி தோன்றிவிடுகிறது.
- டீவன்ஸன்

நூறு ஆசான்களுக்கு ஒப்பானவர் பொறுப்பு மிக்க ஒரு தந்தை.
- இங்கிலாந்துப் பழமொழி

சிக்கனமாகவும் எளிமையாகவும் வாழும் வழியைத் தன் பிள்ளைகளுக்குக் கற்றுத் தரும் தந்தையானவன் , அளவற்ற செல்வத்தை விட்டுச் செல்லும் தந்தையை விட மேலானவன்.
- வில்லியம் பென்

நல்ல மரங்கள் நல்ல கனிகளைக் கொடுக்கும்; நல்ல மக்கள் நல்லதையே செய்வார்கள்.
- இயேசு நாதர்

இன்று செய்யக்கூடியதை நாளைக்கென்று ஒத்திவைக்காதே.

இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாயோ அதைப்பற்றி மட்டுமே நினைக்க வேண்டும்.

தனித்து இருக்கும்போது நண்பரைக் கண்டியுங்கள்.
- சைரஸ்

காலத்தின் மதிப்பு உனக்குத் தெரியுமா? அப்படியானால் உனக்கு வாழ்வின் மதிப்பும் தெரியும்.
- செல்சன்

உறவினர்களை, நண்பர்களை நேரில் புகழாமல் மற்றவர்களிடமே போற்றிப் பேச வேண்டும். வேலையை முடித்த பிறகே ஊழியரைப் பாராட்ட வேண்டும்.
- வடமொழிப் பாட்டு

நேற்று அசாத்தியமாய் இருந்தது, இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொரு நாளும் நாம் கண்டு வருகிறோம்.
- மகாத்மா காந்தி

அதிகார வர்க்கம் என்பது, சிறிய மனிதர்களால் இயக்கப்படும் அசுர இயந்திரம்.
- ஓனோரே தெ. பல்ஜாக்



அறிவு இல்லாத கண்ணியம், பலவீனமானது, பயனற்றது. கண்ணியம் இல்லாத அறிவு ஆபத்தானது; அஞ்சத்தக்கது.
- ஸேம்யல் ஜான்ஸன்

அனுபவத்தின் அன்பிலராயின், அரிய கொடைகளும் அற்பமாகிவிடும்.
- வில்லியம் ஷேக்ஸ்பியர்

மக்களின் ஆசை எப்போதும் குறைவது இல்லை; அது மனத்தின் பசி.
- காண்டேகர்

அன்பைப் பயில வேண்டும், மீண்டும் மீண்டும் பயின்றுகற்க வேண்டும். அதற்கு முடிவே கிடையாது.
- கேத்தரின் ஆன்போர்ட்டர்

சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இருகருவிகள்.
- ஜார்ஜ் ஹெர்பர்ட்

செய்வதற்கு எப்போதும் வேலை இருக்க வேண்டும். அப்போதுதான் முன்னேற முடியும்.
- மில்டன்

புதிய படைப்புகள் காணாத ஒரு நாட்டின் கலை உணர்ச்சியே நாளடைவில் செத்துப் போகும்.
- ராஜாஜி

பக்கத்து வீட்டுக்காரன் உங்கள் உறவினனைவிட நெருங்கியவன்.
ஜே. பி. பிள்யூஎல்ப்

நாம் சிலரை வெறுப்பதற்குக் காரணம் அவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாததுதான். அவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாததற்குத் காரணம் நாம் அவர்களை வெறுப்பதுதான்.
- ஸ்பானிஷ் அறிஞர்

ஒரு சங்கிலியின் வலிமை அச்சங்கிலியிலுள்ள வலிவு குறைந்த வளையத்தைப் பொறுத்தது. ஒரு குழுவின் வலிமை அதிலுள்ள வலிமையற்றவனைப் பொறுத்திருக்கிறது.
- ஆங்கிலப் பழமொழி

RangaRakes Tamilnavarasam.com

நல்லதையே நினைக்க அருள வேண்டும்
நல்லதையே பார்க்க அருள வேண்டும்
நல்லதையே கேட்க அருள வேண்டும்
நல்லதையே பேச அருள வேண்டும்
நல்லதையே செய்ய அருள வேண்டும்
நல்லதே நடக்க அருள வேண்டும்
நல்லதையே நடத்தி வைக்க அருள வேண்டும்
நல்லதையே படிக்க அருள வேண்டும்

மனிதனிடமுள்ள வற்றாத ஆசைகள்தான் அவன் வாழ வேண்டுமென வற்புறுத்துகின்றன.

- காங்கிரீ

முடியும் என்று நம்புவோருக்கு எதுவும் முடியும்.

- வர்ஜில்

உயர்ந்த உண்மை மலர்வது ஆழ்ந்த அன்பிலேயே.

- �grீன்

காலத்தில் செய்வதைத் தள்ளிப் போடவேண்டாம். தாமதத்தால் தீய முடிவுகள் ஏற்படும்.

- ஷேக்ஸ்பியர்

படிக்கும் பழக்கம் ஒரு முழுமையான மனிதனை உருவாக்கும். கருத்தரங்கங்கள் ஒரு மனிதனைப் பக்குவப்படுத்தும். எழுதுகிற மனிதனே மனிதன்.

- கார்லைல்

கடின உழைப்பு, நேர்மை, விடாமுயற்சி, உறுதியான சிந்தனைகள் வெற்றிக்கு அடிப்படை.

- சாகர்

பயணம் அறிவாளியை மேதையாக்கும்.

பயணம் தொடக்கத்தில் கல்வி; பின்னர் அதுவே அநுபவம்.

- பேக்கன்

சிந்தனை வனப்பு, எழுத்தின் வனப்பு, சொல்லின் வனப்பே வனப்பு.



கருத்துக்களிலிருந்து அனுபவத்தைப் பெறுவதுதான் கல்வியின் பெரும் சோதனையும் சாதனையுமாகும்.

- சாந்தாயனா

குறைந்த செலவில் நாடுங்கள் தற்காப்பு செய்து கொள்ளும் முறை கல்வி.

- எட்மண்ட் பர்க்

உடைமையிலோ, பெறுவதிலோ இன்பமில்லை; கொடுப்பதில்தான் உண்டு.

- ஹென்ரி டிரம்ண்ட்

உழைத்துப் போராடாமல் வெற்றியைக் கிட்ட இயலாது.

- தாமஸ் ஏ. கெம்பஸ்

வாழ்வதில்தான் இன்பம், உழைப்பதில்தான் வாழ்வு.

- லியோ டால்ஸ்டாய்

அமைதி இல்லாத இடத்தில் இன்பம் இருக்க முடியாது.

- ஜான்ட்ரைடன்

வேற்றுமையை நீக்குவதே வெற்றிக்கு வழி.

மனிதனின் உண்மையான மதிப்பு அவன் வழங்குவதில் உள்ளது. பெறுவதில் அல்ல.

- ஆல்பெர்ட் ஐஸ்டீன்

நல்ல தகுதி உடையவருக்கும் எதுவும் கேட்காதவருக்கும் தாராளமாகக் கொடு; அது உனக்கே கொடுத்துக் கொள்வதாகும்.

- தாமஸ் ஃபுல்லர்

பெற்றதைக் காப்பதற்கும் ஈவதற்கும் அறிவு வேண்டும்.

- மிகேல் தெ ஸொர்வான்டில்

நன்றாகப் பேசுவது நல்லதுதான்; ஆனால் நன்றாகச் செய்வது அதனினும் நல்லது.

- கிளார்க்

எதற்கும் அஞ்சாதே; எதையும் வெறுக்காதே; யாரையும் ஒதுக்காதே; உன் பணியை ஊக்கமுடன் செய்.

- அரவிந்தர்

RangaRakes
Tamilnavarasam.com

சோம்பலும் சோர்வும் கொண்டு நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட ஒரு நாளேனும் பெரு முயற்சியோடு வாழ்ந்திருந்தால் மேலானது.

- புத்தர்

கவிதை எழுதுவதைப் போலவே கழனி உழுவதும் கண்ணியம் மிக்கது என்பதை உணரும் வரை எந்த இனமும் முன்னேறமுடியாது.

- புக்கர் டி வாசிங்டன்

உழைப்பு உடலை வலிமையாக்கும்;
துன்பங்கள் மனத்தை வலிமையாக்கும்.

செனெகா

ஒரு சிலரிடம் மட்டும் நாம் நம்பிக் கல்வியை ஒப்படைக்க முடியும்.

- லூயிஜ்இமேஜென் கினி

மிக்க கடினமானவை மூன்றுண்டு.
இரகசியத்தைக் காப்பது.
இழைக்கப்பட்ட தீங்கை மறப்பது
ஓய்வு நேரத்தை உயர்ந்த வழியில் பயன்படுத்துவது.

- ஜே. பி. பால்மர்

சரியாகச் செய்யாத செயலுக்காக வருத்தப்பட்டு என்னை அணுகினால் நான் ஒருபோதும் மன்னிக்கமாட்டேன். சரியாகத் திறமையாகச் செய்து முடித்து விட்டால் ஒருபோதும் பாராட்டத் தவறமாட்டேன்.

- சவகர்லால் நேரு

மெதுவாகப் பேசு, அது உன் இரகசியங்களைப் பாதுகாக்கும். நல்ல எண்ணத்தோடு இரு, அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.

- வள்ளலார்

அழகு என்றால் என்ன? துறவிகள் மெலிவது அழகு; நான்கு கால் விலங்குகள் கொழுப்பது அழகு; மனிதன் கல்வி கற்பது அழகு.

- பார்மியப் பழமொழி

நன்மையை நூறுபேர் விரும்புவார்கள்; ஆனால் உண்மையைச் சிலரே விரும்புவார்கள்.

- காந்தியடிகள்

பயன் கருதிச் செய்யப்படும் வேலை தொண்டாகாது. தொண்டு என்பது அடிமை வேலையன்று; அது தெய்வப் பணி.

- திரு. வி. க.



அன்பில்லாத் தொடர்பு, நட்புமாகாது; உறவுமாகாது.

- கூடலூர் கிழார்

அன்பு, அச்சமில்லாதது; அழிவில்லாதது.
அன்பு அருளைத் தரும்; ஆற்றல் பொருளைத் தரும்.

- காந்தியடிகள்

அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக் கூடத்திறக்கும்.

அன்புக்கும் அறிவுக்கும் எல்லையே இல்லை.

அழகுணர்ச்சி, அன்புணர்ச்சி, நன்னடத்தை மனித குலத்துக்குப் பெருமையைக் கொடுக்கும்.

- அஸ்கர்வில்டி

அளவோடிருந்தால் அவதிப்படத் தேவையில்லை; எதிலுமேதான்.

நல்லுரைகளும், நல்ல தோழர்களும் அறத்திற்கு உறுதுணை.

- ஐஸாக் வால்ட்டன்

விலை கொடுக்காமல் பெற இயலாத ஒரு பொருள் அனுபவம்.

- யாரோ

நல்ல உடைகளுக்கு எல்லாக் கதவுகளும் திறக்கும்.

- தாமஸ் புல்லர்

தலைசிறந்த சாதனைகள் பெரும்பாலும் இளமையின் சாதனைகளே.

- பெஞ்சமின் டிஸ்ரேலி

உங்களிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால் உங்களால் ஆகாதது ஒன்றுமில்லை. நீங்கள் தன்னலத்தைத் துறந்தவர்களா? அப்படியாயின், உங்களை எதிர்க்கும் சக்தி ஒன்றுமில்லை.

- விவேகானந்தர்

துயரத்திற்கு ஒரே மாற்று மருந்து சாதனைதான்.

- ஜார்ஜ் ஹென்றிலீவ்ஸ்

கோபம் என்னும் அமிலம் அறியப்படும் இடத்தைவிட, அதை வைத்துக் கொண்டிருக்கும் காலத்தையே பெரிதும் நாசப்படுத்தி விடும்.

- கிளென்டல்

நல்ல வரவேற்பு பாதி விருந்து.

ஜெர்மன் பழமொழி

RangaRakes Tamilnavarasam.com

முடிந்த வழிகளில் எல்லாம் நன்மை செய்
முடிந்த வகைகளில் எல்லாம் நன்மை செய்
முடிந்த இடங்களில் எல்லாம் நன்மை செய்
முடிந்த நேரங்களில் எல்லாம் நன்மை செய்
முடிந்த மனிதருக்கு எல்லாம் நன்மை செய்

வாய்ப்பு தானாக வருவதல்ல; மனிதன் தானே உண்டு பண்ணிக்கொள்ள வேண்டும்.

- பெர்னாட்ஷா

எதையும் உன்னால் செய்ய முடியாது என்று மலைக்காதே செய்யமுடியும் என்று துணிவாய்ச் செய். இலகுவாக முடியும்.

- சாகர்

அஞ்சாதவனும், ஆசைப்படாதவனுமே உண்மையான உயர்ந்த மனிதன்.

வீடெங்குமுள்ள இருளைக் குறித்துக் குறைகூறுவதைவிட ஒரு சிறு விளக்கேற்றி வைப்பது மேல். உலகெங்குமுள்ள கேடுகளைக் குறித்துக் குறை கூறுவதைவிட ஒரு சிறு நலன் செய்வது சிறந்தது.

நீங்கள் ஒரு ஆண்பிள்ளையைப் படிக்க வைத்தால் அந்த ஒரு பிள்ளைக்கு மட்டுமே அந்தக் கல்வி பயன்படும். ஆனால் ஒரு பெண்பிள்ளையைப் படிக்க வைத்தால் அந்தக் குடும்பத்தார் அனைவருக்கும் பயன்படும்.

- சார்லஸ்

அழுதுகொண்டிருப்பவன் எதையும் அடைய முடியாது. ஆற்றல் படைத்திருப்பவன் எதையும் அடைய முடியும்.

இயல்பாக அதிகாலையில் எழுந்திருப்போர் ஏதேனும் ஒரு துறையிலாவது மேலோர் ஆவது திண்ணம்.

இயற்கையில் அல்லல்படுதற்கு நாம் மனிதராகப் பிறக்கவில்லை. இயற்கையை வென்று அல்லலை அகற்றுவதற்கு நாம் மனிதராகப் பிறந்திருக்கிறோம்.

அமைதியான உள்ளமே மகிழ்ச்சிக் கடலின் எல்லை.

- பெர்னார்ட்ஷா

பெருஞ்செயல்களெல்லாம் பெருங் காவியங்கள் போன்றவை. பெருங் காவியங்கள் எல்லாம் பெருஞ் செயல்கள் போன்றவை.



மலரானது மணம் வீசி மக்களை மகிழ்விக்கிறது. மனிதா, நீ நலம் புரிந்து மக்களை மகிழ்விப்பாயாக.

காற்றுக்கு மலை அசைவதில்லை. அங்ஙனம் இடுக்கண்களுக்குச் சான்றோர் அசைவதில்லை.

நீண்ட காலம் வாழ வேண்டுமென்பது பெரும்பாலான பேர்களின் விருப்பமாகும். ஆனால் காலத்தைப் பயன்படுத்தி வாழ விரும்புவோர் மிகச்சிலரே.

- ஹீஜிஸ்

அன்பு என்பது உள்ளத்தின் நெகிழ்ச்சி.

புரட்சிகள் எந்த நாளும் பின்னோக்கிச் செல்வதில்லை.

- எமர்சன்

ஒருவன் தனக்கு அளவற்ற உற்சாகம் இருக்கும் எந்தத் தொழிலிலும் வெற்றி பெற முடியும்.

முன்னேற்றம் என்பது இன்றைய செயலாக்கம். நாளைய உறுதி நிலை.

- எமர்சன்

உண்மை அழகுள்ளது, அழிவற்றது.

- பிளாட்டோ

அதிகமாகப் பேசுவோர் செயல்புரிவதில்லை.

- மாஜினி

மனிதர்களின் செய்கைகளே அவர்கள் எண்ணங்களின் விளக்கம் ஆகும்.

- லோக்ஸ்

வீடு திருந்தினால் நாடு திருந்தும்.

- வ. ரா.

அமைதியை விட மேலான மகிழ்ச்சி வேறெதுவும் இல்லை.

- புத்தர்

நம்மை உயர்த்துவது செயலன்று - செய்வதில் உள்ள ஆர்வம்.

- பிரௌனின்

அச்சத்தை வெல்வதே முதல் வெற்றி.

- கார்லைல்

RangaRakes
Tamilnavarasam.com

நாம் நம் செயல்களைத் தீர்மானிக்கிறோம். நம் செயல்களும் நம்மைத் தீர்மானிக்கின்றன.

- எலியட்

அன்பு நெறியால் வையம் வளர்கிறது.

அறிவாற்றல் அவனியை ஆள்கிறது.

ஆற்றல்மிகு அறிவினைத் தருவதே சிறந்த கல்வி.

வணிகர்க்குத் தேவையானவை;
தொலைநோக்கு
திட்டமிடல்
தீர்வுகாணல்
தெளிவு
துணிவு
துன்பம் கண்டு துவளாமை
அறவுணர்வு
பொதுநலம்

தலைவர்கள் அறுவகைப்படுவர்.
நல்லியல்புகள் அமைந்த பெருமிதத் தலைவர்கள்;
பொறுப்பற்ற தலைவர்கள்;
பொறுப்பேற்கத் தயங்கும் தலைவர்கள்;
இடைக்காலத் தலைவர்கள்;
தலைமைப் பண்பு இல்லாத தலைவர்கள்;
சந்தர்ப்ப வசத்தால் தலைவர்கள் ஆனவர்கள்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

(திருக்குறள் 34)

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

(திருக்குறள் 505)

நல்லதை நினை; நல்லதைச் சொல்; நல்லதைச் செய்.

அறிவு வளர வளர உணர்ச்சி பண்படுகிறது.



உறுதி, இது இல்லாவிட்டால் நீங்கள் நல்லவராக இருப்பது கூடக் கடினம்.

- உட்வெல்

கடமையைச் செய்; புகழ் உன்னைத் தேடிவரும். செல்வாக்கும், மதிப்பும் தானாகவே ஏற்படும்.

- கைவர்

செயல்திறன் செல்வத்தைக் குவிக்கிறது.

- வெற்றிச் செல்வன்

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளும் அல்ல; இடையூறுகளும் துன்பங்களுமே.

- மாத்யூஸ்

பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது.

- ஸ்பெயின் பழமொழி

சிந்தனை ஆற்றல் மனித குலத்தை உயர்த்துகிறது.

- வெற்றிச் செல்வன்

'இருள் இருள்' என்று சொல்லிக் கொண்டு சும்மாயிருப்பதை விட ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்ற முயற்சி செய்.

- கன்பூஷியஸ்

அரைமணி நேரம்தானே என்று கருதாமல் அந்த அரைமணி நேரத்திலும் காரியத்தைச் செய்து கொண்டு இருப்பவனே மேலான மனிதன்.

- கதே

வாழ்வாகிய ஆடையில் எப்பொழுதும் இருவகை நூல் இருக்கும். நன்மை தீமை அவை.

- ஷேக்ஸ்பியர்

எல்லாவற்றைப் பற்றியும் ஏங்கி, ஏங்கி மனம் வெறுத்துப் போக வேண்டாம். எல்லாவற்றிலும் நம்பிக்கை கொண்டு முயற்சி செய்யுங்கள் முன்னேறுவீர்கள்.

- கதே

அறமே ஆற்றல் என நம்புவோமாக. அந்த நம்பிக்கையுடன் நாம் அறிந்த கடமையை ஆற்றத் துணிவோமாக.

- ஆப்ரகாம் லிங்கன்

RangaRakes
Tamilnavarasam.com

சிறப்பு என்பது ஆற்றலைச் சரியான வழியில் பயன்படுத்திக் கொள்வதில்தான் இருக்கிறது.

- ஹென்றி பீச்சர்

திறமையையும் மிஞ்சிவிடக் கூடிய ஆற்றல் நிலையான பயிற்சிக்கு உண்டு.

- செனிகா

முதியோர் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் ஓர் ஒளிமிக்க மணி இருக்கிறது.

- சீனப்பழமொழி

சோம்பல் என்பது மனத்தின் உறக்கம்.

- பிரான்ஸ் பழமொழி

உங்களை அதிகமாகச் சிந்திக்க வைக்கும் புத்தகங்களே உங்களுக்குப் பயன்படப் போகும் புத்தகங்கள் ஆகும்.

- பார்க்கர்

நடக்காதவன் கால்களிலே சிலந்தி கூடு கட்டும்.

- எகிப்தியப் பழமொழி

சிறப்பான புரட்சிமிக்க நிகழ்ச்சிகள் எழுத்தினால் ஏற்படுவதில்லை. ஆனால் சொற்பொழிவின் காரணமாகவே அவைகள் ஏற்பட்டுள்ளன.

- ஹிட்லர்

நூலகம் என்பது ஆடம்பரமான ஒன்றல்ல; வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகளில் அதுவும் ஒன்றாகும்.

- எச். வீ. பீச்சர்

மனித அறிவை மூடநம்பிக்கையானது கண்ணுக்குத் தெரியாத சங்கிலியால் பிணைத்து இருக்கிறது

- இங்கர்சால்

தன் கருத்தை என்றும் மாற்றிக்கொள்ளாத மனிதன் தேங்கிய தண்ணீரைப் போன்றவன். அதில் அழிவுப் பூச்சிகள் வளர்கின்றன.

- வில்லியம் பிளேக்

புதிய உலகம் செய்வோம்.

- பாரதிதாசன்



மனிதனுடைய வலிமையை அழிப்பன மூன்று; அச்சம், கவலை, நோய்.

- ஹீப்ரு பழமொழி

எது தேவை? தீர்மானிக்க மனம்; வழிவகுக்க அறிவு; செய்து முடிக்கக் கை.

- கிப்பன்

சோம்பேறி இரண்டு முட்களுமில்லாத கடிகாரம்; அது நின்றாலும் ஓடினாலும் பயனில்லை.

- கௌப்பா

மேல்நோக்கிச் சருக்குவது என்பது கிடையாது; கீழ்நோக்கிச் சருக்கத் தொடங்கி விட்டால் இடையில் நிற்பது என்பது கிடையாது.

- ஜியார்ஜ் எலியட்

எல்லோரும் பழக்கத்திற்கு அடிமைகளே; சிலர் சிற்றடியர்; சிலர் கொத்தடியர்; அவ்வளவே வேறுபாடு.

- மாண்டேய்ன்

எந்தப் பொய்யும் மூப்பு அடையும் வரை வாழ்வதில்லை.

- ஸோபாகிளீஸ்

உலகமே என் நாடு; நன்மை செய்வதே எனது சமயம்.

- தாமஸ் பெய்ன்

துன்பங்களே சான்றோரை நீட்டி அளக்கும் கோல்.

- பர்க்

முடியும் என்று நம்புவோர்க்கே எதுவும் முடியும்.

- வெர்ஜில்

புகழ்ச்சியை முட்டாள்களின் உணவு என்று கூறுவர்; ஆனால் அறிஞரும் சில சமயங்களில் உண்பதுண்டு.

- ஸ்விப்ட்

நோய் வராமல் தடுப்பவன் அறிஞன்; வந்த பின் தடுப்பவன் மனிதன்; வந்த பின்னும் தடுக்காதவன் அறிவற்றவன்.

மனிதன் தன்னை மேன்மேலும் உயர்த்திக் கொள்ளாவிடில், எத்துனை இழிந்த பிறவி!

- தெரோ

RangaRakes Tamilnavarasam.com

மருந்துகளுள் சிறந்தவை, ஓய்வும் உண்ணா நோன்புமே.
- பிராங்களின்

ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்கு ஒப்பாவாள்.
- ஹெர்பர்ட்

விழாமையன்று நம் பெருமை; விழுந்தொறும் எழுவதே.
- கோல்ட்ஸ்மித்

நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது.
- ஜான்ஸன்

நிதானக் கட்டுப்பாடே இன்ப நுகர்ச்சியின் பொன்னான விதி.

கடுமையான உழைப்பைத் தவிர வெற்றிக்கு வேறு வழி இல்லை.

உழைப்பு வறுமையை மட்டும் விரட்டவில்லை; தீமையையும் அது விரட்டுகிறது.
- வால்டேர்

எங்கு போனாலும் சரி - உன் முழு இருதயத்தோடு போ.
- கன்பூஷியஸ்

இன்பம் அடைவதற்கான தலைமைக் கூறு எப்போதும் ஏதேனும் செய்து கொண்டிருப்பதே.
- பர்ரோன்

அன்பே அனைத்தறன். மனச்சான்றே மாண்புறு வழிகாட்டி.
- ஸவனரோலா

எதுவும் அழகாக இருப்பதற்கு அது ஒழுங்காக இருப்பது அவசியம்.

சுமை நிரம்பத் தோன்றத் தோன்ற நீங்கள் மேலே ஏறிக்கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள்.
- அனாஸி

மகன் தந்தை தேடியதைத் துய்ப்பதோடு நிற்காமல் தானும் புதிதாய்த் தேடக்கடவன்.
- கார்லைஸ்

வேலை செய்தாலன்றி நாட்களும் புனிதமாகா; வாழ்வும் புனிதமாகாது.
- ரஸ்கின்

RangaRakes



கோபத்துக்குச் சிறந்த முறி, தாமதம்.
- ஸெனகா

நேர்வழியே ஒழுக்கத்திற்குச் சுருக்க வழி.
- ரஹேஸ்

தான் செய்வது என்ன என்பதை உணர்ந்து செய்பவனுக்கு உலகம் வழிவிட்டு நிற்கிறது.
- டேனியல் வெப்ஸ்டர்

சோதனைகள் தாம் ஒரு மனிதனை அவனுக்கு அறிமுகப்படுத்துகின்றன.

மனதில் உறுதி வேண்டும்.
வாக்கில் இனிமை வேண்டும்.
நினைவில் நல்லது வேண்டும்.
- பாரதிதாசன்

போனால் வராதது ஒன்றே ஒன்று: அது பொழுதே!

சிரிக்க - அது நெஞ்சின் இசை.
சிந்திக்க - அது ஆற்றல் வளம்.
படிக்க - அது அறிவின் ஊற்று.
உழைக்க - அது வெற்றி வாய்ப்பு
விளையாடுக - அது இளமைக் கொடை.
நட்பாடுக - அது மகிழ்நலப் பெருக்கு.

பகுத்துக் கொள்ளப்படும் துன்பம் பாதியாகக் குறைந்து விடும்; ஆனால் பகுத்துக் கொள்ளப்படும் அன்போ இரட்டைப் பங்காகப் பெருக்கெடுக்கும்.

வாழ்வை விரும்புகிறீர்களா? பொழுதை வீணாக்காதீர்கள். ஏனெனில் பொழுதால் ஆனதே வாழ்வு!

அறிவாளியுடன் ஒரு முறை உரையாடுவது, ஒரு திங்கள் நூல்களைப் படிப்பதைவிட நன்மை தருவதாகும்.

வாழ்வு தந்த பாடம் ஒன்று; இடுப்புக்கு உடை, மேலுக்குச் சட்டை என்பவற்றைப் போல், முகத்துக்குப் புன்னகை என்பதாகும்.

ஒவ்வொருவனும் உழைத்தே தீர வேண்டும். ஒரு கணமேனும் ஒருவன் உழைப்பின்றி இருத்தல் கூடாது.

Tamilnavarasam.com

காலமும் நானும் சேர்த்து நிற்பதால் எதையும் என்னால் நிறைவேற்றிவிட முடிகிறது.

- பிலிப்

அறிவை மேலும் மேலும் கூர்மையாக்கிக் கொள்ளப்பயன்படும் கருவி கல்வி.

- யங்

அடக்கமே அறிவுடைமையின் சிறந்த அடையாளம்.

- ஜெர்மிகாலியர்

நூலை உண்டாக்கியவருடைய உயிரைப்போலவே அவருடைய நூலும் உயிராற்றல் உடையதாகும்.

- மில்டன்

உலகத்திலே கல்வி மிக முக்கியமானது மட்டுமன்று; வியத்தகு மாற்றங்களையும் உண்டு பண்ணவல்லது.

- இங்கர்சால்

மனிதனிடம் அறிவு உறங்கினால் கீழான இச்சைகள் கண்விழித்தெழுந்து குதியாட்டம் போடும்.

- பிளேட்டோ

பாவத்திற்குப் பல கருவிகள் உண்டு. ஆனால் அவற்றிற்கெல்லாம் பொருத்தமான கைப்பிடி பொய்!

- ஹோர்ம்ஸ்

சிந்தனை இல்லாமல் முன்னேற்றம் இருக்க முடியாது.

- ஜே. கிருஷ்ணமூர்த்தி

இலட்சியங்களை வகுத்தே நாம் வாழ்கிறோம். தூய உணர்வுகள் என்னும் ஒளிர்க்கதிர்களாலேயே நாம் புகழ் பெறுகிறோம்.

இப்பொழுது இருக்கும் நிலையிலிருந்து, தான் விரும்பும் நிலைக்கு வர ஒருவன் முயற்சி செய்யும்போது, எதிர்படும் நிலையான போராட்டம்தான் வாழ்க்கை.

- ஜே. கிருஷ்ணமூர்த்தி

ஒரு வாரம் செய்யும் வேலையைக் காட்டிலும் ஒரு நாள் எதைப்பற்றியாவது கவலைப்படுவதே அதிகமான அளவுக்குத் தளர்ச்சியைத் தந்து விடும்.

- ஜேம்ஸ் ஆபரி



ஒரு மனிதன் எப்படி இறந்தான் என்பது முக்கியமன்று. அவன் எப்படி வாழ்ந்து வந்தான் என்பதுதான் முக்கியம்.

- சாமுவேல் ஜான்சன்

தன்னைப் புகழ்ந்து கொள்வதும், பிறரை இகழ்வதும் பொய்க்கு இணையானதே.

சினத்தை விட்டவன் எந்நாளும் துயருறுவதில்லை. பேராசையை விட்டவன் பேரின்பம் அடைகிறான்.

இன்று செய்யக்கூடியதை நாளைக்கென்று ஒத்திவைக்காதே.

ஒருவனிடம் இருக்கும் உயர்ந்த ஆற்றலைக் கண்டுபிடித்து வளர்ப்பது கல்வியே ஆகும்.

- கன்பூஷியஸ்

எளிய உணவை உண்பது குற்றமாகாது. எளிய எண்ணத்தை எண்ணுவதே பெருங்குற்றமாகும்.

சீராகச் செலவு செய்து, பணத்தைச் சேமித்துவை அப்படிச் சேமித்து வைப்பதே சிறந்த வருமானமாக இருக்கும்.

- எட்மண்ட் பர்க்

அறிவு, தெளிவு பெற வைக்கிறது. தெளிவு துணிவைத் தருகிறது. வேறென்ன வேண்டும் மனிதனுக்கு?

- ஹம்ப்ரி

அறிவோடு படிப்பவனே, சிறந்த மேற்கோள் காட்டமுடியும்.

- லூயிசாமேரி

நீண்ட பேச்சுக்கள், பேசியவனுக்குத் திருப்தி அளிக்கலாம். ஆனால் கேட்பவர்களுக்குச் சித்திரவதை ஆகும்.

- பெல்ட்ஹாம்

பல பேச்சாளர்கள் தங்கள் பேச்சில் ஆழமில்லை என்பதற்குப் பதிலாக, நீளத்தைக் கூட்டிவிடுகிறார்கள்.

- மாண்டஸ்கியு

நல்ல மனிதர்களுக்கு அச்சங்கள் குறைவு.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்.

- திருவள்ளுவர்

RangaRakes Tamilnavarasam.com

பொதுவாகத் தலைசிறந்த அறிவு என்னவென்றால் உறுதியாகத் தீர்மானித்தலே.

- நெப்போலியன்

மகிழ்ச்சி, அளவான உணவு, போதிய ஓய்வு ஆகியவை மருந்துவரை வீட்டுக்குள் விடமாட்டா

- லாங்பெல்லோ

பொறிகளின் ஆளுகையில் வாழ்பவன் துன்பத்தில் சிக்குண்டு அழிவான்.

- பாக்ஸ்டர்

நம் கண் முன்பு உள்ளதைச் செய்வதே நம் மேலான கடமை.

- கார்லைல்

செய்த வேலையின் நன்மையை அளந்து பார்த்துக் கூலி கொடுக்கப் பெறாத ஒரு தொழில் இலக்கியம்தான்.

- புரூட்

வாழ்க்கையில் நிகழ்ச்சிகள் எத்தகையவை என்பதைவிட, அவைகளை நாம் எப்படி ஏற்றுக்கொள்கிறோம் என்பதைப் பொறுத்தது இன்பம்.

- ஹம்போல்ட்

உழைப்பில் பலர் பங்கெடுத்துக் கொண்டால் வேலை எளிதாகிவிடும்.

- ஹோமர்

அரசனாயினும், குடியானவனாயினும் தன் வீட்டில் அமைதியைக் காண்பவனே தலைசிறந்த மகிழ்ச்சி உள்ளவன்.

- கதே

துயில்தான் நமது வளர்ப்புத் தாய்.

- ஷேக்ஸ்பியர்

வாசகனின் நேரத்தில் அதிகமாய் எடுத்துக் கொள்ளாமல், அவனுக்கு மிக அதிகமாக அறிவை அளிப்பவன் மிகப்பெரும் பணியைச் செய்கிறான்.

- ஸிட்னிஸ்மித்

துன்பமில்லாமல் வெற்றியில்லை. முயற்சியில்லாமல் பெருமையில்லை.

- பென்

கல்விதான் நமக்குரிய அரசியல் பாதுகாப்பு.

- எச். மான்



நாடுகளுக்கு மலிவான பாதுகாப்பு கல்வி.

தனித்து இயங்கக்கூடிய முறையில் யாரும் படைக்கப்படவில்லை.

- பெல்ட்ஹாம்

தீய மனிதர்கள் அச்சத்தினால் அடங்கி நடக்கின்றனர்; நல்ல மனிதர்கள் அன்பினால் அடங்கியிருக்கின்றனர்.

- அரிஸ்டாட்டில்

மனித சமூகம் அனைத்தின் நன்மைக்காக நாம் பிறந்துள்ளோம் என்று கருத வேண்டும்.

- செனீகா

நன்றாகச் சிரித்தால் வீட்டில் ஒளி பரவும்.

- தாக்கரே

சுருங்கச் சொல்வதே பேச்சுத் திறனின் உயிர்நாடி.

- ஷேக்ஸ்பியர்

செல்வம் வாழ்க்கையில் இலட்சியமன்று. அதன் கருவி.

- பீச்சர்

ஆயிரம் சொற்கள் சேர்ந்தாலும், ஒரு செயலைப்போல் மனங்களில் பதிவதில்லை.

- கிப்ஸன்

ஒழுக்கம் ஆன்மாவை நலமுறச் செய்யும்.

- ஃபுல்லர்

ஒருவன் புகழை மற்றவர் புகழ்ந்தால் இசைபோல் இருக்கும். ஆனால் அவன் தானே புகழ்ந்து கொண்டால் கேட்க வெறுப்பாயிருக்கும்.

- ஸெனஃபோன்

மன நிறைவு என்பது இயற்கையாகவே நம்மிடம் உள்ள செல்வம். ஆடம்பரம் என்பது நாமே தேடிக்கொள்ளும் வறுமை.

- சாக்ரடீசு

மூடநம்பிக்கை - மனவலிமை இல்லாதவர்களின் மதம்.

- யாரோ

ஆற்றலில் மிகப் பெரியது மனிதனின் மன ஆற்றலே.

- ஸ்டாலின்

RangaRakes
Tamilnavarasam.com

இன்பங்கள் சேர்ந்து வருவதில்லை; துன்பங்கள் தனியே வருவதில்லை.

இனிமையான சொற்களை மிகவும் குறைவான விலைக்கு வாங்கலாம். ஆனால் அவற்றின் மதிப்போ மிகமிக அதிகம்.

சிந்தனையும் செயலும் ஒன்றாகிவிட்டால் வாழ்க்கையில் வெற்றியை எளிதில் பெற்றுவிடலாம்.

- இராமதாசர்

நம்மிடம் பெரிய தவறுகள் இல்லை என்று குறிப்பிட்டுக் காட்டுவதற்காகச் சிறிய தவறுகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறோம்.

- ரோச்போகால்டு

தொண்ணூற்றொன்பது சதவீதம் உழைப்பும், ஒரு சதவீதம் உள்ளக் கிளர்ச்சியும் சேர்ந்ததுதான் மேதைத் தன்மை எனப்படுவது.

- தாமஸ் ஆல்வா எடிசன்

மக்களின் தேவைக்குத்தக்க பொருள்களை மட்டும் சரியான விலைக்கு விற்போமாயின் வாங்குபவர் எக்காலத்திலும் பெருகி வருவர்.

- ஹென்றி போர்டு

செயல்களைக் கடினமாக்குவது சோம்பேறித்தனம். அதை எளிதாக்குவது உழைப்பு.

- பிராங்களின்

மூப்பு இது நோய்கள் சேரும் துறைமுகம்.

- இங்கிலாந்து

மனித வாழ்க்கை என்பது எண்ணுதற்கரிய பல திருப்பங்களைக் கொண்ட ஆறு.

வாழ்க்கையின் பிற்பகுதியில் உங்களுக்கு மிக விருப்பமான அன்பான நண்பர்களை நீங்கள் அடையலாம். ஆனால் உங்களுடைய தாயின் மூலம் உங்களுக்குக் கிடைத்த விவரிக்க முடியாத அன்னையும் கண்ணியத்தையும் வேறு யார் வாயிலாகவும் உங்களால் பெறமுடியாது.

- மெக்காலே

நிர்வாகி இப்போதிருக்கும் உலகத்தைச் சீரமைக்கிறான். அறிவியலாளன் ஒரு புது உலகத்தையே உருவாக்குகிறான். இப்போது நமது தேவை ஒரு புது உலகம்தான். ஆகவே, அறிவியல் அறிஞரைத்தான் முன்னணியில் வைக்கவேண்டும்.

- நேரு



பிணி போக்கும் மருந்துகளில் சிறந்தவை பசி. உழைப்பு.

- குரோஷ்யா

பகைமையை அன்பினால்தான் வெல்ல முடியும்; இதுவே பண்புடைய விதி.

- புத்தர்

ஒருவனது குறிக்கோளைக் கொண்டே அவன் எத்தகையவன் என்று அறிந்து கொள்ளலாம்.

- ஹோமர்

மகிழ்ச்சியும் உழைப்பும் வாழ்நாளை வளர்ப்பன.

- சிங் செள

உன்னுடைய விருப்பங்கள் மகிழ்ச்சி தருவதில்லை; பிறர் உன்னை விரும்புவதே மகிழ்ச்சியைத் தரும்.

- பிளச்சர்

அமைதியே கலைகளை வளர்த்து, செழிப்பை உண்டாக்கி, இன்பமான புத்துயிரளிக்கும் செவிலித்தாய்.

- ஷேக்ஸ்பியர்

நட்பு பழக்கத்தாலேயே வளரும்; பழக்கத்தாலேயே நிலை பெறும்.

மனித சமுதாயத்திற்கான நல்லவைகளைச் சாதிக்கத் துடிக்கும் மனிதனுக்குக் களைப்பாற நேரமேது.

- ஆஷ்

அதிருப்திகளுக்கெல்லாம் வேர் தன்னலமே.

- கிளார்க்

ஒவ்வொரு நாளும் வாழ்க்கையில் ஆன்மாவின்மீது படியும் தூசியைத் துடைப்பது இசை.

தொண்டு புரியும் எளியவன் உலகிற்குத் தோழனாகிறான்.

வாழ்வு சிக்கலானது. அதனை எளிதாகக் கொள்வர் அறிஞர்.

- வெற்றிச் செல்வன்

தொண்டுள்ளம் கொண்ட தூய வாழ்வு தொழத்தக்கது.

அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்.

- வெற்றி வேற்கை

RangaRakes Tamilnavarasam.com

முதலாவது செல்வமும் முதன்மையான செல்வமும் உடல் நலமே.
- எமர்சன்

பண்போடு பொருந்தாத அனுதாபமெல்லாம் மறைமுகமான தன்னலமேயாகும்.
- காலரிட்ஜ்

தூய்மை என்பது அவா இன்மை.
- திருவள்ளுவர்

இந்த உலகம் ஆற்றல் நிறைந்தவர்களுக்கு உரியது.
- எமர்சன்

உடற்பயிற்சி என்பது களைப்பு உண்டாகாதபடி உழைத்தல் என்று நான் கருதுகிறேன்.
- ஜான்சன்.

செழிப்பு ஓர் ஆசிரியர்; வறுமை அதைவிடச் சிறந்த ஆசிரியர்.

உணர்ச்சி என்பது உள்ளத்தின் குடி வெறி.
- செலித்

ஒருவன் வாழ்வதற்காக உண்ண வேண்டும்; உண்பதற்காக வாழக்கூடாது.
- பிராங்க்ளின்

நல்ல நண்பர்கள் துயரத்தை எளிதாக்குகிறார்கள்.

மாற்றம் இயற்கை நியதி.

தொடர்ந்து எழுதக்கூடிய எந்த எழுத்தாளர்களுக்கும் மிகுதியான வாசகர்கள் இருப்பார்கள்.
- எட்ஹோ

உழைப்பில்லாமல் எதுவும் செழிப்பதில்லை.
- ஸா ஃபாகிளிஸ்

வளர்ச்சிக் கூறுகளுடன் கூடிய பகுத்தறிவே மனிதனுக்கும் விலங்குகளுக்குமுள்ள வேறுபாடு.
டி. பின்னி

ஒருவர் பொறை இருவர் நட்பு.
- பழமொழி



புகழ் உழைப்பின் பயன்.
- வெற்றிச் செல்வன்

உழைப்பே வெற்றிக்கு அடிப்படை

தூய சொல்லும் நேர்மையும் ஒருவனை எந்த நாடு வழியாகவும் அழைத்துச் செல்லும்.

தங்க நங்கூரம் இருந்தால் எந்தத் துறையிலும் தங்கலாம்.

நன்றியும் நெல்லும் நல்ல நிலத்தில்தான் விளையும்.

சிறு ஆணிகளுக்குப் பெரிய சம்மட்டிகள் பயன்படா.

கடவுளைத் தொழு, ஆனால் அதே நேரத்தில் சம்மட்டி அடிப்பதை நிறுத்தாதே.

எந்த வேலையும் இழிவில்லை; சோம்பல் இழிவு.

நட்பு என்பது சமத்துவம்.

வேகமான முடிவுகள் உறுதியானவை அல்ல.

அன்புச் சோலைகள் வாடுவதே இல்லை.

பழைய வழக்கங்களுக்கு வேர் நீளம்.

நன்றி காட்டும் வகை மூன்று:

1. இதயத்தால் உணர்தல். 2. சொற்களால் தெரிவித்தல்.
3. பதிலுக்கு உதவி செய்தல்.

இலைகள் அதிகமாக இருந்தால் கனிகள் குறைவாயிருக்கும்.

தண்ணீர்தான் உணவுகளில் அரசன்.

நல்ல செயலுக்கு வட்டி கிடைக்கும்.

பசிப் பட்டறையில் ஆக்கப்படும் இலக்கியங்களே மிகுந்த புகழ் அடைகின்றன.
- சாமுவேல் பட்டர்

பிறருடைய அன்புக்குப் பாத்திரமாவதைவிட பிறருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாவதே மேல்.
- ஜார்ஜ் மெக்னால்ட்

RangaRakes Tamilnavarasam.com

சிக்கல்கள்தான் மிகப் பெரிய சாதனைகளையும் மிக உறுதியான வெற்றியையும் உருவாக்குகின்றன.

- கென்னடி

பழக்கவழக்கங்கள் சமூகத்தில் ஒரு பெரிய சக்கரம். இது மிகப் பழைமையானது. ஆனால், சிறப்புடையவை.

- வில்லியம் ஜேம்ஸ்

நேர்மையும் தூய்மையும் எளிமை பெற்ற இரட்டைக் குழந்தைகள்.

- தமிழ்வாணன்

ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒத்துப் போகாமல் சமுதாயத்தில் வாழ்க்கை நடத்த முடியாது.

- மு. வரதராசன்

மிகப் பெரிய சாதனைகள் சாதிக்கப்படுவது வலிமையினால் அல்ல, விடாமுயற்சியினால்.

- எடிசன்

மனப்பூர்வமாக முடிந்தமட்டும் முயன்றோம் என்னும் திருப்தியே உண்மையான இன்பமாகும்.

- ஆர்னால்ட் பென்னட்

தெய்வதற்கு ஏதேனும் ஒன்று!
அன்பு செய்வதற்கு ஏதேனும் ஒன்று
நம்பி எதிர்பார்ப்பதற்கு ஏதேனும் ஒன்று
இம்மூன்றும் அடையப் பெறுவதே இன்ப வாழ்வின் இரகசியம்.

- சாமரீஸ்

நல்ல செயல்களில் துணிவுடையவர் நாள்தோறும் வெற்றியே காண்பர்.

- புரூம்

நேர்மை என்ற முத்திரை பதித்த முகங்களாக நமது முகங்கள் ஒளி வீசட்டும். அதுவே ஒளிவீசும் பிறரை மயக்கும் உண்மையான அழகு.

- வில்லிங்டன்

வெல்ல முடியும் என்று நினைப்பவரே வெல்ல முடியும்.

- வெர்ஜில்



இந்தப் பண்புகளைப் பழக்கத்தில் கொண்டு வாருங்கள்.

1. ஊக்கத்துடனும், துணிவுடனும் எந்த ஒரு காரியத்தையும் தொடங்குதல்.
2. கற்பனைத் திறமையுடன் எதையும் பார்க்கும் பண்பு.
3. ஆழ்ந்து சிந்தித்து வேலைகளை ஒழுங்குபடுத்தல்.
4. சிந்தனையைச் சிதறவிடாது ஒருமுகப்படுத்திக் கவனமாகச் செயல்படல்.
5. நேரத்தையும், பணத்தையும் திட்டமிட்டுச் செலவு செய்தல்.
6. எப்போதும் சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் இருத்தல்.

- நெப்போலியன் ஹில்

இரண்டே இரண்டு கல்விகள் இருக்கின்றன. ஒன்று, எப்படிப் பிழைக்கவேண்டும் என்பதைக் கற்றுக் கொடுக்கின்றது. இன்னொன்று எப்படி வாழவேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்கின்றது.

- ஜேம்ஸ் ஆடம்ஸ்

பெருமையை மூன்று அறிகுறிகளால் தெரிந்து கொள்ளலாம். தோற்றத்தில் எளிமை, செயலில் மனிதத் தன்மை, வெற்றியில் வெறியின்மை.

- பிஸ்மார்க்

வறுமையிலேயிருந்து செழுமைக்குப் பயணம் செய்வது கடினம், திரும்பி வருவதோ மிக எளிது.

- ஜப்பானியப் பிமொழி

உலகத்திலேயே மிகவும் மலிவான பொருள் அன்புதான். அது தன்னைப் பெறுபவனுக்கும் வழங்குபவனுக்கும் அதிகமான இன்பத்தை வழங்கும்.

- இங்கர்சால்

வாழ்வின் இலட்சியம் இன்பம் மட்டுமே அல்ல! நம்மையும் பிறரையும் நல்லோராக்குவதே.

- மாஜினி

சிக்கல் எது என்று அறிவது முதல் சிக்கல். அதை அறிந்தாலே பாதி சிக்கல் தீர்ந்துவிடும்.

- ரட்யார்ட் கிப்ளிங்

ஒரு குறிக்கோள்
அளவற்ற ஊக்கம்
தளர்வற்ற நெஞ்சுறுதி
சலியாத உழைப்பு
நேர்மையான பாதை
வெற்றி கிட்டாமலா போய்விடும்?

RangaRakes Tamilnavarasam.com

வாழ்க்கைக் கணக்கில்
நண்பர்கள் கூட்டப்படுகின்றனர்.
எதிரிகள் கழிக்கப்படுகின்றனர்.
மகிழ்ச்சி பெருக்கப்படுகிறது.
அன்பு வகுக்கப்படுகிறது.

எதையும் உன்னால் செய்யமுடியாது என்று மலைக்காதே. செய்ய முடியும் என்று துணிவாய் செய்; இலகுவாய் முடியும்.

தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகிவிடுகிறது.
சோம்பலின் விளைவு வறுமை; முயற்சியின் விளைவு மூலதனம்.

பகைவரையும் நண்பராகக் கருதும் பண்பாளன்தான் உலகத்தை வசப்படுத்த முடியும்.

- வெற்றியாளன்.

சோம்பேறி காலத்தை மதிப்பதில்லை
காலம் சோம்பேறியை மதிப்பதில்லை.

சான்றோர்கள் குற்றத்தைதான் வெறுப்பார்கள்.
குற்றவாளிகளை வெறுக்கமாட்டார்கள்.

துன்பத்தில் இருப்பவனை உடனே போய்ப்பார். ஆனால் செல்வத்தில் இருப்பவன் கூப்பிட்டால் போ.

புசிக்கத் தெரியாதவனைப் போலவே படிக்கத் தகாதவற்றைப் படிப்பவனும் அறிவில்லாதவனே.

மன அமைதி, மகிழ்ச்சி, இன்பம் இவை அன்பு, தவம், தியாகம் முதலியவற்றால் அன்றிப் பணத்தால் கிட்டாது.

உண்பதில், உறங்குவதில், பேசுவதில், எழுதுவதில் சிந்திப்பதிலும் நிதானம் வேண்டும்.

மனிதன் சூழ்நிலைகளுக்காகப் படைக்கப்படவில்லை சூழ்நிலைகளே மனிதனுக்காகப் படைக்கப்பட்டன.

நாம் பெற்ற பொருட்செல்வம் சிறிதளவேயாயினும் அதைக் கொண்டு நாம் திருப்தியுற வேண்டும்.

RangaRakes



ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை. அவன் வாழும் முறையில்தான் உள்ளது.

தற்பெருமை எங்கு முடிகிறதோ அங்கு கண்ணியம் ஆரம்பமாகிறது.

ஒரு விடியலில் செய்த தவறு அவன் வாழ்நாள் முழுவதும் கவலை தருகிறது.

புகழுக்காக நேர்மையை மறந்துவிடக்கூடாது.

வயதில் இளைஞனாக இரு.
அறிவில் கிழவனாக இரு.

எண்ணங்களைச் சம்பவமாக்குவது அரசியல்.
சம்பவங்களை எண்ணங்களாக்குவது இலக்கியம்.

அன்பும் மரியாதையும் கொண்டு இருப்பவன் இந்த உலகத்தில் எதையும் சாதித்து விடுவான்.

உண்மையுள்ளவனுக்குக் கவலையில்லை. அறிவுள்ளவனுக்கு மயக்கமில்லை. துணிவுள்ளவனுக்குப் பயமில்லை.

உலகில் மிகப் பயனற்ற செயல்கள் நான்கு
பயனற்ற மண்ணில் பெய்த மழை!
கதிரவன் வெளிச்சத்தில் வைத்த விளக்கு! குருடனை மணந்த அழகி!
நன்றி கெட்டவனுக்குச் செய்த நற்செயல்.

பேராசை முடிகிற இடத்தில் - மகிழ்ச்சி தொடங்குகிறது!

ஒரு மரத்திலுள்ள பழங்களை எண்ணிவிடலாம்! ஒரு பழத்தால் உருவாகப் போகும் மரங்களை எண்ண முடியாது!

என்றும் புகழ் சேர்ப்பது ஈகை ஒன்றே.

- கம்பர்

உங்கள் தோல்விக்குப் பிறரைக் குற்றம் சொல்லாதீர்கள். நீங்களே பொறுப்பு. தட்டிக்கழிப்பவர், தட்டிக்கழிக்கப்படுபவர். வாழ்வில் உயர முடியாது.

- வெற்றியாளர்

குறைந்த உணவு - நீண்ட வாழ்வு.

Tamilnavarasam.com

இத்தாலியில் படிக்க வேண்டும்; ஜெர்மனியில் உடைகள் வாங்க வேண்டும்; பிரான்சில் விருந்து சாப்பிட வேண்டும்.

எங்கே ஒருவன் ஏழையாக இருக்கிறானோ அந்த நாடு முழுமையும் ஏழையாகத்தான் இருக்கும்.

உழைப்புத்தான் ஒரு மனிதனை மற்றொரு மனிதனைவிட முந்தச் செய்கிறது.

பணம் போகும்போது அதற்கு நூறு கால்கள், வரும்போது இரண்டு கால்கள்.

புதிதாகப் புகழ் வராவிட்டால் - பழைய புகழும் போய்விடுகிறது!

பயணம் செய்யாதவனுக்கு மனிதர்களின் மதிப்புத் தெரியாது!

எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகிறது.

பொன்மொழிகள் அனுபவத்தின் குழந்தைகள்.

ஒரு கடிதம் - பாதி சந்திப்புக்குச் சமம்.

ஒரு நல்ல நண்பன் உன்னில் பாதியாவான். அவனை உன்னுடைய மூன்றாவது கண் எனலாம்.

- அப்துற் ரஹீம்

ஆராய்ந்தறிவதும், சிந்தனை செய்வதும் நம்முடைய உரிமை மட்டுமல்ல; உயர்ந்த கடமையும் கூட

- இங்கர்சால்

தந்தையால் வாழும் மகன், தந்தைக்காக வாழும் மகன்; நீங்கள் எவ்வகை?

- வெற்றியாளர்

ஒரு நல்ல தொழிலும், போதுமான வருமானமும், எதிர்காலத்துக்குக் கொஞ்சம் மீத்து வைக்க வசதியும், தன் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட அறிவும், பிறர்க்கு உதவ வேண்டும் என்ற எண்ணமும் உடையவனே உண்மையான மகிழ்ச்சி உடையவன்.

- இங்கர்சால்

செய்ய இயலாததில் சினங்கொள்வது ஏன்? செய்ய இயன்றதைச் செய்வோமாக.

- ரொமெய்ன் ரோலண்டு



அன்பு, பெறுபவனுக்கும் கொடுப்பவனுக்கும் பத்து மடங்கு ஊதியத்தை உண்டாக்கக் கூடியது.

- இற்கர்சால்

உண்ணும் உணவுக்கு ஏற்பவே மனிதனின் இயல்பும் அமைகிறது. எனவே மனித சமுதாயத்தின் பண்பை உருவாக்குவதில் உணவுக்கு முக்கிய பங்குண்டு.

- எஸ். ராதாகிருஷ்ணன்

இளைஞர்களுக்கு வேண்டுவது நூற் படிப்பன்று. ஆற்றல் முழுவதையும் கூட்டிச் செயல்புரியும் திறமையேயாகும்.

- ஹப்பார்ட்

அறிவின்மை கேவலம்; அதைவிடக் கேவலம் அறிய மனமில்லாமை.

செருக்கு மனிதனை ஊத வைக்கும், மேலே உயர்த்தாது. கோபமுள்ள மனிதன் வெறி பிடித்த குதிரைமேல் சவாரி செய்கிறான்.

பெரிய நம்பிக்கைகளில் பெரிய மனிதர்கள் உருவாகின்றனர்.

ஆயுளை நீடிக்க உணவுகளைக் குறை.

உண்மை செருப்பணிந்து புறப்படுவதற்குள் பொய் உலகையே சுற்றி விடுகின்றது.

கடல் எந்த ஆற்றையும் விலக்குவதில்லை.

கொடுக்க கூடியவனுக்கு நண்பர்கள் அதிகம்!

எதையாவது முயற்சி செய், எதையாவது செய்து முடி; அந்த இரவில் உன் மனம், உன் செயல்பாட்டை நிம்மதியாக அசைபோடும்.

- லாங்ஃபெல்லோ

ஒன்றாய் இணைய முற்படுவது நல்ல துவக்கம். ஒன்றாய் இருப்பது நல்ல வளர்ச்சி. ஒற்றுமையாய் உழைப்பது வெற்றி.

- ஹென்றி போர்டு

தூய காற்று 10 அவுன்ஸ் மருந்துக்குச் சமம்.

- ஜப்பான்

வேகமான முடிவுகள் உறுதியானவை அல்ல.

- கிரீஸ்

நீ உண்ணக் கனி மரங்கள் நட்டனர்; மற்றவர் உண்ண நீயும் நடு.

- பாரசீகம்

RangaRakes
Tamilnavarasam.com

உண்மையுள்ளவர்களுக்குக் கவலைகள் இல்லை; அறிவிற் சிறந்தவர்களுக்குத் தயக்கம் இல்லை; உள்ளத் துணிவு உள்ளவனுக்கு அச்சம் இருக்க இடமில்லை.

அறிவு தெளிவு பெற வைக்கிறது. தெளிவு துணிவைத் தருகிறது. வேறென்ன வேண்டும் மனிதனுக்கு.

- ஹம்பரி

தீர்மானமுள்ள மனத்திற்குக் கவலை இல்லை.

- அப்துல் ரஹீம்

உயர்ந்தோரின் வாழ்க்கை வரலாறே உலக வரலாறு.

- தாமஸ் கார்லைல்

அறிவுக்கு உலகம் எப்போதும் தன் வணக்கத்தைச் சொல்லும். திறமைக்கு ஆதரவு தரும். தூய உள்ளத்தை வரவேற்கும்.

- இங்கர்சால்

மனம், வயிறு போன்றது. அதற்குள் எவ்வளவைத் திணிக்கிறோம். என்பது முக்கியமல்ல. எவ்வளவு சீரணமாகிறது என்பதே முக்கியம்.

- ஆல்பெர்ட் ஜே. நாக்

வரலாற்றைப் படைக்கும் மனிதர்களுக்கு, அதை எழுத நேரம் கிடைப்பதில்லை

- மோட்டணானிக்

கிரேக்க வரலாறு, ஒரு கவிதை;
லத்தீன் வரலாறு, ஓர் ஓவியம்;
இக்கால வரலாறு ஒரு நிகழ்ச்சிப் பட்டியல்.

- ரொன தெஷத்தோபிரியான்

உயர்ந்தோர் வரலாற்றைத் தோற்றுவிக்கின்றனர். வரலாறு, உயர்ந்தோரைத் தோற்றுவிக்கின்றது.

- டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன்.

அரசின் தசைநார்கள், வரிகள்.

- ஸிசரோ

அமைதியிலும், அசையா உறுதியிலுமே, உன் வலிமை உள்ளது.

- ஏஸாயா

எளியோரை உயர்ந்த மனிதர்களாக்குவதே குடியரசுக் கோட்பாடு, குறிக்கோள்.

- லைமேன் ப்ரைஸன்



மக்களுக்கு நீ தேவைப்படுகின்றாய், மக்களுக்கு நீ நெருக்கமாய் உள்ளாய் என்ற உணர்வே, இன்பங்களில் தலையாயது. மகிழ்ச்சிகளில் நிலையானது.

- மாக்சிம் கார்க்கி

மானுடர் உழாவிடினும், வித்து நடாவிடினும், வரம்பு கட்டாவிடினும், அன்றி நீர் பாய்ச்சாவிடினும் வானுலகு நீர் தருமேல், மண்மீது மரங்கள் வகைவகையான நெற்கள் புற்கள் மலிந்திருக்கு மன்றோ!

- சுப்பிரமணிய பாரதியார்

மரியாதையை விதைப்பவன், நட்பை அறுவடை செய்வான். அன்பைப் பயிர் செய்பவன், அருளைக் கொய்வான்.

- புனிதர் பேஸில்

இயற்கை, காலம், பொறுமை இவையே, மூன்று சிறந்த மருத்துவர்கள்

- ஹென்ரி ஜார்ஜ் போஹ்ன்

உலகின் சிறப்புகள் அனைத்திலும் உயர்ந்தது, அசைவற்ற அமைதியான மனச்சான்று.

- வில்லியம் ஷேக்ஸ்பியர்

நீயும் உடன்படாவிடில், நீ தாழ்ந்தவன் என்ற உணர்வை உன்மேல், எவராலும் எங்கும் எப்படியும் சுமத்த முடியாது.

- எலினால் ரூஸ்வெல்ட்

வீட்டுக்கு அருகிலே மீன்பிடிக்க முயன்று வெற்றி பெறாமல் இருக்க முடியும் போது, ஐந்து கல் நடந்து போய் அதைச் செய்ய வேண்டிய தேவை இல்லையே.

- மார்க்ட்வெய்ன்

பிறப்பு அன்னையால்; சிறப்பு கல்வியால்!

வட்ட மேசையில் யாருக்கு முக்கிய இடம் என்பது பற்றிச் சர்ச்சை எதுவுமில்லை.

- ஜான் ரே

ஓடுவதில் பயனில்லை; நேரத்தில் புறப்படுவதே தேவை.

- ஜீன்தெலா ∴போன்த்தேன்

பதினாறு வயதில் அழகாய் இருப்பதில் உனக்குப் பெருமை ஒன்றும் இல்லை. அறுபது வயதில் அழகாய் இருந்தால் அது உன் ஆன்மாவின் தனிப்பட்ட சாதனை.

- மேரிஸ்டோப்ஸ்

RangaRakes
Tamilnavarasam.com

பணக்காரனாய்ச் சாக வேண்டும் என்பதற்காக, வறுமையில் வாழ்வது, வடிகட்டிய முட்டாள் தனம்.

- டெஸ்மஸ் ஜீவெனால்

வாய்மையைத்தவிர வேறெந்த ராஜதந்திரமும் எனக்குத் தெரியாது.

- மகாத்மா காந்தி

முன்னேற்றம் எனும் உயிர்க் குருதியைத் தேக்கிக்காக்கும் மண்வளம், மக்கள் சக்தி.

- விஸ்ஸேரியான் பெலின்ஸ்கி

பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடாது!

கல்வி ஆபரணமல்ல, ஆடை!

நற்பண்புகள் தான், உலகின் மகிழ்ச்சியான ஆதாரம் என்ற உண்மையை மனிதன் உணர்ந்து கொண்டால் போதும்.

- போப்

நீரோட்டம் ஓடிக்கொண்டே இருக்கட்டும். உன் வாழ்க்கை தேக்கமடைய விட்டுவிடாதே.

- ஜான் பர்ரோஸ்

ஒவ்வொன்றாக இணைந்து வாழ்வது உங்கள் ஆற்றல் - பிரிந்து வாழ்வது எப்பொழுதும் ஆபத்துதான்.

- லாங் ஃபெல்லோ

வாழ்வில் நமக்குச் சொந்தம் என்று சொல்லக்கூடிய சொத்து, நம் செயல்களே.

- சார்ல்ஸ் கோல்ட்டன்

வாழ்க்கையை நேசிப்பவர்களாக இருந்தால் நேரத்தை வீணாக்காதீர்கள். ஏனென்றால் வாழ்க்கை நேரத்தால் ஆனது.

பட்டங்களைப் பெறுவதில் பெருமை இல்லை., பட்டங்களைப் பெறத் தகுதியுடையவராகிக் கொள்வதில்தான்.

எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் விழிப்பாக இருந்தால் போக வேண்டிய இடத்தை உறுதியாக அடையலாம்.

சுவையை மட்டும் கருதி வயிற்றை நிரப்புவதனால்தான் செல்வர்கள் பல நோய்களுக்கு ஆளாகிறார்கள். பணக்காரர்கள் ஏழையைப் போல உண்ணவேண்டும்.

RangaRakes



எளிய உணவுதான் சிறந்தது. அதிக உணவு வகை அதிக நோய்களைத் கொண்டு வரும்.

தனக்குக் கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பைவிட, தன் உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன்தான் சமூகத்தில் உயரமுடியும்.

கல்வியில்லா ஒருவன் தன் வாழ்வில் பெறற்கரிய பேற்றை இழந்தவனாகிறான்.

- திரு. வி. க.

நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது என்பது எளிது; ஆனால் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பதுதான் அரிது.

- கதே

நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்தபோதிலும் அதைத் தேடிச்செல்.

- நபிகள் நாயகம்

மரம் தனக்காகப் பழுப்பதில்லை; ஆறு தனக்காக ஓடுவதில்லை; சான்றோர் தமக்காக வாழ்வதில்லை.

- குரு நானக்

வளமுடன் வாழும்போது நண்பர்கள் உன்னை அறிவர். வறுமையில் நீ நண்பர்களை அறிவாய்.

தான் கொடுத்ததை மறப்பதும், பிறரிடம் பெற்றதை நினைப்பதுமே நட்புக்கு அழகு.

- டூமாஸ்

உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றி எதையுமே சாதிக்க முடியாது.

- எமர்சன்

இன்பத்தின் இரகசியம் அடங்கியிருப்பது, நீ விரும்பியதைச் செய்வதில் அல்ல; நீ செய்வதை விரும்புவதில்தான்.

- ஜேம்ஸ் எம். பேரி

உழைப்பினால் சொந்தப் பொருளுக்கு உள்ள சிறப்பு கடன் வாங்கிய முதலுக்குக் கிடையாது.

- ஹென்றிபோர்டு

உடற்பயிற்சி செய்வது உடலுக்கு எவ்வளவு நல்லதோ, படிப்பது அவ்வளவு மனத்துக்கு நல்லது.

- ரிச்சர்ட் ஸ்டீலி

Tamilnavarasam.com

பணம் தேடுதல் அவ்வளவு கடினமன்று. அதை முறையாகச் செலவழிப்பதே கடினம்.

- பர்ஜியன்

பல அறிஞர்களுடன் உறவாடினால் நீயும் அறிஞனாவாய். பல பணக்காரர்களுடன் உறவாடினால் பணக்காரன் ஆகமாட்டாய்.

- எபிக்டெட்ஸ்

சோம்பல் எல்லாவற்றையும் கடினமாக்கும். சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிமையாக்கும்.

- ப்ராங்களின்

வயிறு புடைக்க இரண்டு வேளை சாப்பிடுவதைவிட மூன்று அல்லது நான்கு வேளை அரை வயிற்றுக்குச் சாப்பிட்டால் உடல் இலேசாகவும் இயக்கத்துக்கு உகந்ததாகவும் ஆகும்

- அரவிந்தர்

அறிவுக்கு வையகம் எப்போதும் தன் வணக்கத்தைச் செலுத்தும். திறமைக்கு ஆதரவு தரும். தூய உள்ளத்தை வரவேற்கும்.

- இங்கர்சால்

உனக்குத் தெரிந்ததைத் தெரியுமென்று ஒப்புக்கொண்டு, தெரியாததைத் தெரியாதென உணர்தல் அறிவு.

- கன்பூஷியஸ்

தன்மானம், தன்னிறைவு, தன்னடக்கம் இம்மூன்றுமே வாழ்க்கையில் தலைசிறந்த ஆற்றலை அளிக்கக் கூடியவை.

- டென்னிசன்

இன்பம் வரும்போது அதைப் பற்றிச் சிந்தனை செய்யாதே. அது போகும் போது அதைப்பற்றிச் சிந்தனைசெய்.

- அரிஸ்டாட்டில்

உண்மையை அறிவதற்குச் சாதனம் சிந்தனை; நாம் உண்மையை அறிந்திருந்தால் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை.

- இங்கர்சால்

நம்பிக்கையைக் கை விடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.

- அண்ணா



ஒழுக்கம் உள்ள நீங்கள் இந்த உலகத்துக்கு ஒளியாக இருக்கின்றீர்கள். மலையின் உச்சியில் இருக்கும் பட்டணம் மற்றவர் கண்களுக்கு மறைந்திருக்க மாட்டாது.

- ஏசு

கதிரவன் தோன்றிவிட்டால் நாம் எந்தத் துணையும் நாடுவதில்லை. அதைப்போல அறிவுக்கூர்மை படைத்தவர்கள் அருகில் இருந்தால் வேறு எந்த வகையான துணையும் நமக்குத் தேவையில்லை.

எந்த ஒரு மனிதன் தீவிரமாகவும், திடமாகவும் சிந்திக்கிறானோ, அந்தச் சிந்தனைகளின் வளர்ச்சி கலை ஆகும். அவ்வாறு சிந்திக்கிறவனே கலைஞன் ஆவான்.

- புதுமைப்பித்தன்

விழிப்புடன் செயல்பட்டு வாழ்ந்து வருகிற எந்த ஒரு சமுதாயத்தையும் நாட்டையும் எந்த எதிரியாலும் அடக்கிவிட முடியாது.

- லாலா லசபதிராய்

நீ உடலில் அணியும் உடையை விட மேலானது முகத்தில் அணியும் மலர்ச்சி.

எந்தவிதக் கொள்கையும் நோக்கமும் இல்லாத மனித வாழ்க்கை, திசைகாட்டும் கருவி இல்லாத கப்பல் நடுக்கடலில் நிற்பதாகும்.

- ரூஸ்வெல்ட்

பிழைகள் புரியாது பெருமையுற்றவன் எவனுமில்லை. நீ செய்த பிழைகளைக் குறித்து மனந்தளராதே. அவைகளினின்று பாடம் கற்றுக்கொள்.

நான் குறித்த நேரத்திற்குக் கால்மணி நேரம் முந்தியே சென்றுவிடுவது வழக்கம். அதுதான் என்னை மனிதனாக்கியுள்ளது.

சோம்பேறிக்கு எல்லாம் கடினமாகத் தோன்றும். ஊக்கமுள்ளவனுக்கு எல்லாம் எளிதாய்த் தோன்றும்.

- ரிச்சர்ட்

நாளை நாளை என்று சோம்பேறிகள் மட்டும்தான் சொல்வார்கள். இன்றைய நாளின் அருமையை உணர்ந்தவர்கள், இதோ! உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

- வெயிஸி

சொற்கள் நம் சிந்தனையின் உடைகள். அவற்றைக் கந்தல்களாகவும், கிழிசல்களாகவும், அழுக்காகவும் உடுத்தக்கூடாது.

RangaRakes
Tamilnavarasam.com

தனக்கென வாழ்பவன் தாழ்ந்தவன் ஆகிறான். பிறர்க்கென வாழ்பவன் பெருவாழ்வு வாழ்கிறான். அடக்கம் அணிகலன் மட்டுமல்ல; அறத்தின் காவலன்.

ஜோசப் அடிஸன்

பிறரைப் பாராட்டுங்கள்! பாராட்டுக் கிடைக்கும்.
பிறரை மதியுங்கள்; மதிப்புக் கிடைக்கும்.
அன்பு செலுத்துங்கள்; அன்பு தேடி வரும்.
இவை ஒற்றைவழிப் பாதைகள் அல்ல;
இரட்டைவழிப் பாதைகள்!
அன்பில் வணிகத்திற்கு இடமில்லை;
வணிகத்தில் அன்பிற்கு இடமில்லை. - விவேகானந்தர்

வாழ்க்கை சுவை மிகுந்தது. அறியாமையினால் அதை நரகமாக மாற்றிக் கொண்டு விடாதீர்கள்.

- யாரோ

நாடு முன்னேற, நாம் முன்னேற, சோதிடத்தை நம்பிப்பயனில்லை. உழைப்பு, கடுமையான உழைப்புத்தான் தேவை.

- நேரு

ஒருவன் தான் தவறு செய்ததை ஒப்புக்கொள்ள வெட்கப்படக்கூடாது. ஒப்புக்கொள்வதன் பொருள் என்ன? அவன் நேற்றைவிட இன்று அதிக அறிவு பெற்றுவிட்டான் என்பதே.

- போப்

சிலர் உணவைத் தேடுகின்றனர். சிலர் செல்வத்தையும் சுகத்தையும் தேடுகின்றனர்; சிலர் புகழைத் தேடுகின்றனர். ஆனால் எல்லோரும் ஓய்வை நாடுகின்றனர்.

- லாப்பிரிட்ஜ்

உழைப்பு உடலை வலிமையாக்கும். துன்பங்கள் மனத்தை வலிமையாக்கும்.

- ஸெனீகா

விழிப்பதற்கே உறக்கம்; வெல்வதற்கே தோல்வி; எழுவதற்கே வீழ்ச்சி.

- இராபர்ட் பிரவுனிங்

ஆயிரம் சொற்களில் கூறுவதைப் பழமொழி ஐந்தாறு சொற்களில் கூறிவிடுகிறது.

- மார்ச்

இரண்டு கால் உள்ள எல்லோரும் நடக்கலாம். இரண்டு கைகள் உள்ள எல்லோரும் எழுதிவிட முடியாது.



இரண்டு பேர் எப்பொழுதுமே திருப்தியடைவதில்லை; அறிவைத் தேடுபவனும் செல்வத்தைத் தேடுபவனும்.

- அரேபியா

சான்றோருடைய வாழ்க்கை வரலாறுகள் அவர்களைப் போல் நாமும் ஆகலாம் என்று நினைவூட்டுகின்றன.

- லாங்பெல்லோ

வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக் கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.

- சாமுவேல் பட்லர்

நூறு பேர்கள் சேர்ந்து ஒரு முகாம் அமைக்கலாம். ஆனால் ஓர் இல்லத்தை இல்லமாக்க ஒரு பெண் வேண்டும்.

- சீனப்பழமொழி

முதலில் மனிதன் மதுவைக் குடிக்கிறான். பின்பு மது மனிதனைக் குடிக்கிறது.

காலமென்னும் ஆழ்கடலில் பயணம் செய்யும் நமக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்பவை நல்ல நூல்களே.

வீப்பல்

தன்னம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா வாயில்களும் திறந்து வரவேற்பு அளிக்கும்.

- எமர்சன்

நல்ல மனைவியைவிட உயர்ந்த வரமுமில்லை; பொல்லாத மனைவியைவிட பொல்லாத சாபமும் இல்லை.

- ஸைமன்பீஸ்

மதவெறியனுக்கு மூளை இல்லை; அதனால் யோசிக்க முடியாது. இதயமில்லை; அதனால் உணர முடியாது.

- கர்னல்

புகழ் என்பது நம்முடைய செயல்களின் எதிரொலி.

- தாமஸ் புல்லர்

பெருமை நிரம்பிய மனிதர்களே மக்கள் சமுதாயத்தின் மைல்கற்கள்.

- மாஜினி

ஒரு நல்ல பாராட்டுக் கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு நான் இரண்டு திங்கள் மகிழ்ச்சியுடன் உயிர் வாழ்வேன்.

மார்க் ட்வெய்ன்

RangaRakes
Tamilnavarasam.com

விரும்புவது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பு.

- ரோமன் பழமொழி

அறிவுக்காக முதலீடு செய்யப்படும் பணம் எப்பொழுதும் கொழுத்த வட்டியைக் கொடுக்கும்.

அறியாமையே துயரத்தின் தாயாகும். அறியாமையைக் காட்டிலும் அடிமைத்தனம் எதுவுமில்லை.

ஒருவனிடம் தூக்கம் எப்போது குறையுமோ அப்போதே அவன் மேதையாக ஆகின்றான்.

கோபம் அன்பை அழிக்கிறது. செருக்கு அடக்கத்தை அழிக்கிறது.

திருட்டுப் பொருளை விலைக்கு வாங்குபவன் திருடனை விட மோசமானவன்.

துணிவு இல்லையேல் வாய்மை இல்லை. வாய்மை இல்லையேல் பிற அறங்களும் இல்லை.

- காந்தியடிகள்

உன்தகுதி பிறர்க்குத் தெரிய வேண்டுமானால் பிறர் தகுதியை நீ அறிந்துகொள்.

நாணயமாக இருப்பவனிடம் எப்போதும் குழந்தைத்தனம் காணப்படும்.

அடக்கமாக வாழ்பவன் இம்மையிலும், மறுமையிலும், இன்பம் பெறுகிறான்.

நல்லவன் நட்பைப் பொருள் கொடுத்தாவது கொள்ளுக. தீயவர் நட்பைப் பொருள் கொடுத்தாவது தள்ளுக.

- திருவள்ளுவர்

உண்மையான அறிஞனிடம் பிறரைத் தாழ்மையாக எண்ணும் எண்ணம் இருப்பதில்லை.

பொருளுக்கு மனிதன் அடிமை. பொருள் யாருக்கும் அடிமை இல்லை.

உன்னால் எதைச் செய்யமுடியாது என்று சொல்கிறார்களோ அதைச் செய்து காட்டுவதுதான் இன்பம்

செலவுக்கு மேலே கூடுதலாக வருவாயுள்ளவன் செல்வன். வரவுக்கு மேலே செலவழிப்பவன் ஏழை.

நாம் வாழவேண்டும் என்பது முக்கியமல்ல வாழ்க்கைக்கு அப்பால் நமது பெயர் பொறிக்கப்பட வேண்டும்.

◆◆◆

RangaRakes Tamilnavarasam.com